சுதேசமித்திரன்

1—8—48

விலை 4 அணா

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW108-111 W. WOODWARD LTD LONDON. ENGLAND

ஸங்கீத ரஸிகர்களுக்கு ஓர் நல் விருந்து !

கிருஷ்ண பக்தியில் தலைசிறந்த ஸாஹித்யம்

ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகள் அருளிய

அ ஷ் ட ப தி

(கீத கோவிந்த மஹா காவ்யம்.)

கீர்த்தனசார்ய ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ அய்யங்காரால் பதிப்பிக்கப்பட்டது.

(இரண்டாம் பதிப்பு)

ஸம்பிரதாயத்தை அனுசரித்து ஸ்வரப்படுத்தி அரிய அனுபந்தங்களுடன் கூடியது.

ஸங்கீத ஸாஹித்யங்களில் முந்திய நூல். பாரத நாட்டில் பல பாகங்களிலும் முக்கியமாக தமிழ் நாட்டிலும் பாகவத ஸம்பிரதாயஸ்தர்களும், ஸங்கீத வித்வான்களும் போற்றிப் பாடும் உத்தம நூல். கீர்த்தனசார்யர் பல மகான்களையும் ஸங்கீத மேதாவிகளையும் கலந்து பேசி அபூர்வமான ஆராய்ச்சியுடன் வெளியிட்ட ஒப்புயர்வற்ற நூல்.

அஷ்டபதி மூலமும், வர்ணமெட்டும், ஸங்கீதத்தையும் கதையையும்பற்றின குறிப்புகளும் அடங்கியிருக்கின்றன. அத்துடன் ஜயதேவ ஸ்வாமிகள் சரித்திரம், அந்தந்தக் காலத்தில் உபயோகிக்கப்பட்ட ராக தாளங்கள், நாயக நாயகி விவரங்கள், தமிழ், தெலுங்கு, கன்னட கேரள நாடுகளில் அஷ்டபதிகளைப் பாடும் விதங்கள், கீதகோவிந்த உள்ளுரைப் பொருள்கள், ப்ரம்ம வித்யா உபதேசம் முதலிய அரும்பெரும் விஷயங்கள் அடங்கியுள்ளன.

வெகு காலமாக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட நூல் வெளிவந்துள்ளது.

எல்லா சுதேசமித்திரன் ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

விலை ரூ. 2. தபால் செலவு அணு 8.

சுதேசமித்திரன் புத்தகசாலை,
விக்டரி ஹவுஸ், மவுண்ட்ரோட், சென்னை.

Lovely long hair

ASOKA AMLA

HAIR OIL

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St,
Royapuram, Madras.

ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

'மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.
" சுதேசமித்திரன் " புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தர மான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனர்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்பரைட்டர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

வைத்தியரத்ன யு.ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ.7.

மஹாபில்வாதி லேகியம்
பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்து விடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வத்ரம் ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனம்.
ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

இந்த முக்கிய அறிவிப்பை நீங்கள் அவசியம் படிக்கவேண்டும்!

லக்ஷக்கணக்கானவர்களுக்கு இது உதவியளிக்கும்.

பிரிய வாசகர்களே! நான் ஒரு நாட்டு வைத்தியனே அல்லது இங்கிலீஷ் டாக்டரோ அல்ல. ஆனால், என் துர் நடத்தைகளின் பலனை அனுபவிக்க நேர்ந்த ஒரு துர்பாக்கியன், நான் கேவலமான எனது கெட்ட செய்கைகளின் பயனாய் பல கஷ்டங்கள் ஏற்பட்டு முடிவில் எனது வலிமை முழுதும் இழக்க நேரிட்டது.

நாளுக்கு நாள் நான் மிகவும் பலவீனமடைந்து வந்தேன். ஹிருதயத் துடிப்பு அதிகரித்தது. அடிக்கடி கிறு கிறுப்பும் மயக்கமுமாக வந்தது. அந்தரங்கமாக ஆயிரக்கணக்கான டாக்டர்களிடம் சிகிச்சை செய்துகொண்டு பார்த்தேன். ஒருவித குணமும் ஏற்படவில்லை. இந்த துன்பமயமான வாழ்வு வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று நான் நினைக்க ஆரம்பித்தேன்,

அதிர்ஷ்டவசமாக வேலை நிமித்தம் நான் பெஷாவர் செல்ல நேர்ந்தது. அங்கு ஒரு மஹாத்மாவைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. சோகமே உருவாகத்தோன்றிய என்மேல் அவர் கருணைகொண்டு என்னைப்பற்றி விசாரித்தார். சஞ்சலத்தில் மூழ்கிக்கிடந்த என் மனம் மஹாத்மாவிடம் உண்மையைச்சொல்லும்படி தூண்டியதால் அவரிடம் மறைக்காமல் என் தேக நிலையின் உண்மையைத் தெரிவித்தேன், மஹாத்மா என்மேல் பச்சாதாபம்கொண்டு உள்ளுக்கு ஒன்றும் வெளியே பூசுவதற்கு ஒன்றுமாக இரு மருந்துகள் தயாரிக்கும் முறையை எனக்குக்கற்பித்தார். அவர் போதனையின்படி அவர் முன்னிலையிலேயே மூலிகைகளைச் சேகரித்து இந்த இரு மருந்துகளையும் தயாரித்த பிறகு சாப்பிட ஆரம்பித்தேன்,

பிரிய வாசகர்களே! நான் கடவுள் சாட்சியாகக் கூறுகிறேன். 7-வது தினமே எனக்கு இளமை திரும்பிவிட்டது. எனது வலிமையைப்பற்றி நான் இப்பொழுது பெருமைகொள்ளுகிறேன். சில டோஸ்கள் சாப்பிட்டதுமே வியாதி சற்று குறைந்தாலும் மஹாத்மா சொன்னபடி நான் மருந்தை 21 தினங்கள் சாப்பிட்டேன். என்னால் தினம் 4 சேர் பால் ஜீரணிக்க முடிந்தது, என் கண்கள் பிரகாசம் பெற்றன. முகத்திற்கு அலாதி தேஜஸ் ஏற்பட்டது. தேகத்தில் புதிய பலமும் தேக திடமும் உண்டாயிற்று. ஊருக்குத்திரும்பியதும் இதை நான் அநேகருக்குக்கொடுத்துப்பரீக்ஷித்ததில் வலிமையின்மையைக் குணமாக்குவதில் இது ஓர் நிகரற்ற டானிக் என்பது ருஜுவாயிற்று.

பொதுமக்களின் நன்மைக்காக இதை நான் விளம்பரம் செய்கிறேன். தேக திடம் இழந்து ஆயிரக்கணக்கில் செலவழித்தும் குணம் பெறாதவர்கள் இதை உபயோகித்தால் உடனே குணம் பெறுவது திண்ணம். இதன் விலையோ மிகவும் குறைவு, அயல் நாடுகளிலிருந்துவரும் ஆர்டர்களுடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

இளமை யளிக்கும் மாத்திரைகள் 21 தினங்களுக்கு	ரூ. 5-0-0
மேலே பூசுவதற்குத் தைலம்	ரூ. 5-8-0

இதில் ஹானி பயக்கத்தக்க சரக்குகளின் சேர்க்கை கிடையாது. கிழவர்கள் யுவர்கள் யாவருக்கும் ஏற்றது. சொந்த லாபத்திற்கு விளம்பரம் செய்யவில்லை, மனித சமுகத்தின் நன்மைக்கே விளம்பாம் செய்யப்படுகின்றது. வெளிநாட்டு ஆர்டர்களுடன் முன் பணம் தேவை.

குணத்திற்கு உத்தரவாதம்:

இந்த மருந்தினால் உங்களுக்கு குணமேற்படாவிட்டால் மருந்தின் கிரயத்தை நான் வாபஸ் செய்கிறேன். ஆயிரக்கணக்கான டாக்டர்கள் இதை சிபார்சு செய்கிறார்கள். எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம்

முக்கிய அறிவிப்பு:

நரம்புத்தளர்ச்சி வலிமையின்மை இவைகளால் வருந்துபவர்களுக்கு மட்டும்தான் இம்மருந்து மேக வியாதிகளினால் ஏற்படும் பலஹீனத்திற்கு அற்புதமான நிவாரணி. மேலும் இது நல்ல ரத்தவிருத்தியளிக்கிறது.

ஆங்கிலத்தில் எழுதவும்: **THE MANAGER.**

Dar-Ul-Shafa - Golian (Regd)

Batala, East Punjab

மானேஜர்: தார்-உல் - ஷபா கோலியான் (ரிஜிஸ்டர்டு)
படாலா, கிழக்கு பஞ்சாப்.

மதராஸ் பெங்களூர் ஸ்டாகிஸ்டுகள்:—(1) மெஸர்ஸ் ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ம ராஜா ரோட், பெங்களூர் ஸிடி. (2) மெஸர்ஸ் ஆல்பட் & கோ., 182, மவுண்ட்ரோட் மதராஸ். (3) மெஸர்ஸ் வாஸன் டிரக் ஸ்டோர்ஸ், ஹைக் கோர்ட்டுக்கு எதிரில் மதராஸ். (4) மெஸர்ஸ் மில்டன் & மில்லர், 157, பிராட்வே, மதராஸ்.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரிஹு ஆடிமீ 17உ ★ 1948-ஹு ஆகஸ்டுமீ 1உ No. 27

ஜவாஹரின் எச்சரிக்கை

பண்டித நேருவின் சென்னைவிஜயம் முடிந்துவிட்டது. ஒரு பெரும் புயல் அடித்து ஓய்ந்ததுபோலிருக்கிறது. அவர் இந்நகரில் தங்கியிருந்த மூன்று தினங்களும் நகர முழுவதும் ஒரே ஆரவாரம். ஜவாஹருக்கு ஒரு கணமும் ஓய்வொழிவில்லை. அவர் பேசிய கூட்டங்கள் கணக்கற்றவை. எனினும் சென்ற ஞாயிறன்று நடந்த, லட்சக்கணக்கான மக்கள் திரண்ட பொதுக்கூட்டத்தை சென்னை ஒருபோதும் மறவாது. ஜவாஹரும் தம் வாழ்நாள் முழுவதும் அதை மறக்க முடியாது.

முக்கியமாக இந்தப்பொதுக்கூட்டத்திலும், வேறு பல இடங்களிலும், இன்று நாட்டின் முன்னுள்ள பிரச்னைகள் பலவற்றையும் பண்டித நேரு ஆராய்ந்து, மக்களின் கடமையை வலியுறுத்தினர். இவையனைத்திலும் ஹைதராபாத் பிரச்னை குறிப்பாக சென்னை மாகாணத்தினரது மனத்தை விசேஷமாக வருத்திவருவதை அவர் அறியாமலில்லை. இதைப்பற்றி அவர் வார்த்தைகளை சிறிதும் மெல்லவோ, மழுப்பவோ முற்படவில்லை. நிஜாம் விஷயத்தில் இந்திய சர்க்காரின் கொள்கை என்னவென்பதைத் தெளிவாக திட்டமாக வரையறுத்துச் சொல்லிவிட்டார்.

ஹைதராபாத் எந்நிலையிலும் ஒரு சுதந்திர ராஜ்யமாயிருக்க முடியாது என்பதில் ஜவாஹர் சிறிதும் சந்தேகத்துக்கு இடம்வைக்கவில்லை. அது ஒன்று, இந்திய யூனியனுடன் இணைப்புற வேண்டும்; இல்லையானல் சமஸ்தானம் என்ற முறையில் அது அடியோடு மறைந்துவிட வேண்டியதுதான். தற்போதைய இரண்டுங்கெட்ட நிலைமை இனியும் காலவரையின்றி, நீடிக்கவிட்டுக்கொண்டிருக்கப் போவதில்லையென்றும் பண்டித நேரு அறிவுறுத்தி விட்டார்; அவசியமாயின், நிஜாம்மீது ராணுவ நடவடிக்கை எடுப்போம் என்று திட்டமாக எச்சரிக்கவும் அவர் தயங்கவில்லை.

கள்ள ஆயுத இறக்குமதியிலும், இப்பிரச்னையை ஐக்கிய தேசச் சங்கத்தில் எழுப்பிக் குழப்புவதிலும் முனைந்துள்ள நிஜாம் சர்க்காருக்கு பண்டித நேருவின் எச்சரிக்கை உடனே உறைத்துவிடுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனல் சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை, அவர் பேசியுள்ள வகை இப்பிரச்னை விரைவில் உறுதியுடன் தீர்த்து வைக்கப்படுமென்ற நம்பிக்கையைப் பன்மடங்காக்குவது திண்ணம்.

ஹைதராபாத்தில் தற்போது ஆட்சி புரிவது சிறிதும் நாணயமற்ற ஒரு கும்பல். மக்கள்மீது கொள்ளையரையும். கொலைகாரர்களையும் ஏவிவிட்டு அட்டூழியம் புரிந்து வருகிறது. இந்திய யூனியனைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகளில் பகிரங்கமாக முனைந்திருக்கிறது. இந்நிலையில் அக்கும்பலிடம் அனுதாபமுள்ள யாரையும் இந்திய யூனியனுக்குள் விட்டுவைப்பதற்கில்லை. அவர்கள் உடனேயே இங்கிருந்து ஓடிப்போய்விடட்டும்; இல்லையானல் பிறகு அவர்கள் தப்புவது அசாத்தியமாகிவிடும் என்று பண்டித ஜவாஹர் விடுத்துள்ள எச்சரிக்கை அந்த துரோகிகளை கதிகலங்கச் செய்வது திண்ணம்.

இவ்வாறே முஸ்லிம் லீக் கொள்கைகளில் இன்னும் பிடித்தமுள்ளவர்களுக்கு இந்தியாவில் இடமில்லையென்பதையும் பண்டித நேரு தெளிவாக உணர்த்திவிட்டார். இந்திய யூனியன் மத சம்பந்தமற்ற ஒரு பூர்ண ஜனநாயகமாக விளங்கச் செய்வதே நமது அபிலாஷையெல்லாம். இதற்கு, மதம் அல்லது வகுப்பு அடிப்படையில் அரசியல் கட்சிகள் இயங்கவிடுவது பெருங்கேடு என்பதுவெட்ட

—அடுத்த பக்கம்



ராஜாஜி ஹாலில் "ஸேவா சமாஜ"க் கூட்டத்திற்கு வந்த பண்டித நேரு உற்சாகத்துடன் வழி அனுப்பப்படுகிறார்.

வெளிச்சம். இத்தகைய வகுப்புவாதத்தின் கொடிய விளைவுகள் பலவற்றும் நாம் ஏற்கெனவே அனுபவித்தவைதான். இனியும் இவைகளுக்கு நாம் எவ்விதத்திலும் இடங் கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. இன்னும் பழைய லீக் வழியில் வேலை செய்ய விரும்பும் முஸ்லிம்கள் யாராவது இருந்தால் அவர்கள் உடனே பாகிஸ்தானுக்குப் போய் விடட்டும்; அதுதான் அவர்களுக்கும் நல்லது; நமக்கும் நல்லது என்று பண்டித நேரு சுட்டிக்காட்டியிருக்கிறார். இதற்குப்பின்னும், இங்கிருந்துகொண்டு வகுப்புவாத விஷத்தை வளர்க்கத் துணியக்கூடிய முஸ்லிம்கள் யாரேனும் இருப்பரா என்று நாம் சொல்வதற்கில்லை. இருப்பராயின் அவர்கள் சுயநாசத்துக்கு இதைவிட ஒரு குறுக்கு வழி காண முடியாது.

வகுப்புவாதப் பேயைப்பற்றி பண்டிதநேரு வெளியிட்டுள்ள கருத்துகள் ஹிந்து சமுகத்துக்குள்ளேயே தலையெடுத்துவரும் வகுப்புத் துவேஷத்துக்கும் முற்றிலும் பொருந்தும். நாம் நிர்மாணித்துவரும் நவ இந்தியா பூர்த்தி பெற இத்தகைய துவேஷம் எந்த முறையிலும், எந்த அளவிலும் தலைகாட்டினாலும், அதை வேரறுக்க வேண்டியது அவசியம். வகுப்புவாதம் மட்டுமின்றி எந்தக் குறுகிய உணர்ச்சிக்கும் நாம் ஆதரவு காட்டுவது நமது அடிப்படையான லட்சியத்துக்கே உலை வைக்கக்கூடியதாகும்.

நாட்டின் தற்போதைய நிலையில், வறுமை நீங்கி மக்களின் வாழ்க்கைத்தரத்தைஉயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எவ்வளவு முக்கியமானவை என்று சொல்லத்தேவையில்லை. பல்வழிகளிலும் பண்ட உற்பத்திபெருகினாலன்றி, இந்நோக்கம் ஈடேறாது. எனினும் இதற்குத் தங்களால் முடிந்தவரை முட்டுக்கட்டைபோட கம்யூனிஸ்டுகள் சிறிதும் கூசவில்லை. தொழிலாளர் நன்மையை முன்னிட்டே இந்த நாசத்தொழிலில் முனைந்திருப்பதாக அவர்கள் பேசுவதுதான் வேடிக்கை! ஏழைப்பாட்டாளி மக்களிடம் நேரு சர்க்காருக்குள்ளதை விட வேறு எந்தக் கூட்டமும் அதிக அனுதாபம் கொண்டிருப்பதாகப்பேசுவது நகைப்புக்கிடமாகும். கம்யூனிஸ்டுகள் இந்த வேஷம் போடுவது எப்படியாவது குழப்பமுண்டாக்கத்தான் என்பதை பண்டித நேரு மற்றுமொருமுறை அம்பலப்படுத்தியுள்ளார். தொழிலாளரது உரிமைகளையோ, அவைகளுக்குப் பங்கம் நேரும்போது போராட்டம் நடத்தக்கூடிய வகையில் தங்கள் இயக்கத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கான சுதந்திரத்தையோ யாரும் மறுக்க முடியாது. ஆனால் இதே சமயத்தில் தேசநலமே மற்றனைத்தையும்விட முக்கியமென்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது என்று பண்டித நேரு செய்த உபதேசம் தொழிலாளரது மனத்தில் நிலையாகப் பதிவுறும் என்று நம்புகிறோம்.

கார்ப்பரேஷன் வரவேற்பை மலர்ந்த முகத்துடன் ஏற்ற நமது பிரதமர்.



கவர்னர் நை, லேடி நை, மேயர் இவர்கள், நேருவைக் கார்ப்பொரேஷனில் வரவேற்றபோது எடுத்த படம்



சென்னை அஸெம்பிளியில் ராஜாஜி படத்தை திறந்து வைத்த பண்டித நேரு கவர்னர் ஜெனரலை மிகப் பாராட்டி பேசினர்.

பிரதமர் பண்டித நேருவின் புதல்வி ஸ்ரீமதி இந்திரா காந்தி.

பொதுக்கூட்டத்திற்காக அமைந்த மேடையில், பந்தல்காலை அணைந்தவண்ணம் நேரு ஜன சமுத்திரத்தைக் கண்ணுறுகிறார். பக்கத்தில் சென்னைப் பிரதமமந்திரி ஸ்ரீ ரெட்டியார்.



பண்டித நேருவும், சென்னைப் பிரதம மந்திரியும் "ஜேய் ஹிந்த்" வணக்கம் செய்கிறார்கள்.

மனைவி

தில்லைவாசி

அன்று சாயந்திரம் ரகு ஆபீசிலிருந்து வீட்டுக்கு வரும்போது மிகவும் அலுத்துக்கொண்டே வந்தான். காரணம், சிவகாமு—அவன் மனைவி—இரண்டு மூன்று நாட்களாக ஊரிலில்லை. பிறந்தகம் போயிருந்தாள். ஹோட்டல் சாப்பாட்டை நினைக்கும்போது அவன் வயிறு குழம்பியது. வயிற்றுவலிகூட உண்டாயிற்று.

சிவகாமுவைக் கைப்பிடிப்பதற்கு முன் அவனும் மாதக்கணக்கில் ஹோட்டலில் சாப்பிட்டிருந்தான். அப்பொழுதெல்லாம் ஆபீஸ் வேலை அலுப்புகளுடன் அந்தச் சாப்பாடு அவனுக்கு தேவாமிர்தமாக இருந்தது. அவன் உடம்பிற்கு ஒன்றும் கேடு வரவில்லை. வயிற்றுக்கோளாறும் உண்டாகவில்லை. இன்றோ அந்தச் சாப்பாடு வேப்பங்காயாய்க் கசந்தது.

வீட்டிலோ போட்டது போட்டபடி எல்லாம் அப்படி அப்படியே கிடந்தன. பாய் ஒரு பக்கம்; பாத்திரம் ஒரு பக்கம்; குப்பையோ மூலைக்கு மூலை. அந்த வேலைக்காரியும் அவள் ஊருக்குப் போன சமயம் பார்த்துத்தானா மகளைப்பார்க்கத் தானும் ஊருக்குப் போய்விடுவாள்!

வீடு கிடந்த கிடையும், சாமான்கள் வீழ்ந்து கிடந்த கிடையும் பார்க்கப் பார்க்க அவனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டுவந்தது. அவளும் எவ்வளவு நாளைக்குத்தான் இங்கு வராமல் இருந்துவிடுவாள் என்பதையும் பார்த்துவிடலாம் என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டான்.

ஈஸிசேரில் உட்கார்ந்து கையில் கிடைத்த புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தான். கவனமோ படிப்பில் செல்லவில்லை. புத்தகத்தை மூடிவிட்டு, ஆபீஸ் கட்டைப்பிரித்து, வேலை செய்ய முனைந்தான். அதுவும் அவனால் முடியவில்லை. அந்தக் கட்டையும் தூக்கி அப்பால் வைத்துவிட்டு, கண்ணை மூடிக்கொண்டு அப்படியே ஒரு 'நிஷ்டையில்' உட்கார்ந்திருந்தான். அதற்குள் கடிகாரத்தின் மணியும் 'டாண், டாண்' என்று எட்டு அடித்தது. "ஹோட்டலுக்குப் புறப்பட வேண்டியதுதான், இனித் தாமதித்தால் எல்லாம் ஒரே தண்ணீர் மயம்தான்" என்று கூறிக்கொண்டே, துண்டை உதறிப் போட்டுக்கொண்டே கிளம்பிவிட்டான்.

சாப்பாடு எப்பொழுதும்போல் ஒன்றும் சுவாரஸ்யப்படவில்லை. வேண்டாவெறுப்பாக 'நாலு வாய்' அள்ளிப் போட்டுக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினான். வழியில் ஒரு பீடாவும் வாங்கி வாயில் கொதப்பிக் கொண்டான். சாப்பிட்டு வந்த அந்தச் சாப்பாட்டைப்பற்றி ஒரு நிமிஷம் நினைக்காமல் அவனால் இருக்க முடியவில்லை.

"இந்த ஹோட்டல் சாப்பாட்டைப்பற்றி என்ன சொல்வது? கீரையை வாயில் வைத்தாலே மண் 'கொரக் கொரக்' என்கிறது. சாதமோ ஒரே கூழாயிருக்கிறது. மத்தியானம் குழம்பில் கிடந்தப் பூசனிக்காய், இரவில் ஒரு கூட்டாய் இலையில் பிரசன்னமாகிவிடுகிறது. அதுவே மறுநாள் ஒரு பொறியலாக இலையில் வந்து குந்திவிடுகிறது. எல்லா வேளைக்கும் இதே சாம்பார்தானா? இரவில் ஒரு வத்தல் குழம்பு வைத்தால் என்னக் கெட்டுவிடுகிறது? எப்பொழுது பார்த்தாலும் புளிமிச்சம் பழ ஊறுகாய்தானா? மாங்காய் ஊறுகாய் என்று ஒன்று இருக்கிறது ஏன் தெரியாமல் போய்விடுகிறது? முற்றிப்போனக் கத்தரிக்காயும், வெண்டைக்காயும் எங்கிருந்துதான் கிடைக்குமோ?"

"வாஸ்தவம், கல்யாணமான பிரம்மசாரிகளுக்காகவா ஹோட்டல் நடத்துகிறார்கள். அவர்களையே நம்பி, அவர்கள் சௌகரியத்திற்காகமட்டும் நடத்தினால் கட்டி வருமா? அந்த வியாபாரந்தான் உருப்படுமா? எத்தனையோ நித்தியப் பிரம்மசாரிகள், வழிப்போக்கர்கள், வெளியூர் ஆசாமிகள் இருக்கும்போது, லாபம் தன்னாலேயே வந்துவிட்டுப் போகிறது. தினச் சாப்பாட்டுக்காரர் ஒன்றிரண்டு பேருக்கு அவர்கள் செய்யும் காய்கறிகள், குழம்பு வகைகள், திரும்பத் திரும்பப் போட்டுச் சாப்பிட்டு அலுத்துப் போனவைகளாக இருக்கலாம். ஆனால் ஒரு வேளையோ, இரு வேளையோ சாப்பிடும் இருநூறு, முந்நூறு பேர்களுக்கு அவைகள் எல்லாம் புதியவைகள்தானே?"

இந்த நினைப்புகளுடன் ரகு வீட்டைப் போய் அடைந்தான். ஹோட்டல் சாப்பாட்டுக்கு அன்றுதான் மகத்தான மூன்றாவது நாள்! இன்னும் எத்தனை நாட்கள் இவ்வாறு தள்ள வேண்டுமோ?

"வீட்டில் சண்டையோடோ, பூசலோடோ ஒரு ரஸம் சாதம் சாப்பிட்டாலும் அதன் இனிமை இனிமைதான். கோபத்தில் சாப்பிடாமல் பட்டினியாகக் கிடந்தாலும், அதிலும் இனிமையிருக்கிறது. ஹோட்டலில் அலுத்துப்போன, 'கூழைக் குழப்பிச் சாப்பிடுவதைவிட வீட்டில் கிடைக்கும் நொய்க் கஞ்சிக்கூட மேலானது' என்று மீண்டும் அவன் மனம் வீட்டுச் சாப்பாட்டின் அருமை பெருமைகளைப்பற்றி நினைத்தது.

சிவகாமுவும், ரகுவை இவ்வாறு தனியாகத் தவிக்கவிட்டுப் பிறந்தகம் போனது இது முதல் தடவை

யல்ல. எத்தனையோ தடவை போய்ப் போய் வந்திருக்கிறாள். அதுவும் அந்த முதல் ஆண் குழந்தைப் பிறந்த நாள் முதற்கொண்டு அடிக்கடி போய் வந்துகொண்டிருந்தாள். கல்யாணமான இந்த ஆறு, ஏழு வருஷங்களில் அந்தக் குழந்தைப் பிறப்பதற்குமுன் குடித்தனம் பண்ணின மூன்று வருஷங்களில் ரகுவாகப் பார்த்து அவளைப் பிறந்தகம் போய் வரும்படி வற்புறுத்துவான். “இப்பொழுது என்ன அவசரம்? நீங்கள் இங்கே சாப்பாட்டுக்கு கஷ்டப்படும்போது நான் எதற்காகப் போகணும். எனக்கு எல்லாம் போகத் தெரியும்'' என்று சொல்லிவிடுவாள்.

அவர்கள் இருந்த ஊருக்கும், அவள் பிறந்தகத்திற்கும் ஒரு மணி நேர ரயில் பிரயாணத் தூரந்தானிருந்தது. காலை வண்டியில் போனால், சாயந்திர வண்டியில் திரும்பி விடலாம். அப்படியிருந்தும் அவள் அவனைத் தனியே விட்டுப்போக விரும்பவில்லை.

இன்றோ அதற்கும் அவன் மாற்றிக்கொண்டு வந்திருந்த இடத்திற்கும், ஒரு அரைநாள் பிரயாணம். இதைக்கூட லட்சியம் செய்யாமல் மாதம் ஒரு முறையாவது தங்கள் ஜாதி. ஜனங்களைப் பார்க்க வேண்டுமென்று போய்க்கொண்டிருந்தாள். அதுவும் அந்தக் குழந்தை பிறந்தவுடன்தான் அப்படிப்போக ஆரம்பித்தாள். குழந்தை நகரும்போது ஒரு தடவை, குந்தி உட்காரும்போது ஒரு தடவை, பல் முளைக்கும்போது ஒரு தடவை, நடக்க ஆரம்பித்ததும் ஒரு தடவை, பேசத் தொடங்கினதும் ஒரு தடவை, இப்படியாகக் குழந்தை ஒவ்வொரு புதிய காரியங்களாகச் செய்யும்போதெல்லாம், அந்த அதிசயங்களைக் காண்பித்துவிட்டு வரத்தான் பிறந்தகம்போய்க்கொண்டிருந்தாளோ, என்னவோ? தவறாமல் போய்க்கொண்டிருந்தாள். அவனுக்கும் மாதத்தில் குறைந்தபக்ஷம் ஒரு வாரமாவது ஹோட்டல் சாப்பாடு நிலைத்துவிடும்.

“போய்ப்பத்து நாள் இருந்துவிட்டு வரப்போகிறேன்'' என்று சொல்லுவாள். அவளும் போவாள். போன சுவடு தெரியாமலே நாலைந்து நாட்களில் திரும்பி வந்துவிடுவாள். “பத்து நாள் இருக்கப்போகிறேன் என்றாயே, ஏன் இதற்குள் திரும்பிவிட்டாய்?' என்று ரகு கேட்பான். “நீங்கள் இங்கு சாப்பாட்டுக்கு எப்படிக் கஷ்டப்படுவீர்களோ? வேளா வேளைக்கு சாப்பிடுவீர்களோ, மாட்டீர்களோ? நான் மட்டும் சாப்பிட்டுக்கொண்டு அங்கே உட்கார்ந்துவிட்டால் போதுமா?'' என்று அவளும் அன்பாய் பதில் கூறுவாள்.

ரகுவும் அதைச் செய்யவில்லையே, இதைச் செய்யவில்லையே என்ற குறை சிவகாமுக்கு மட்டும் என்றைக்கும் உண்டு. ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுத் தனக்கும் ஏதாவது வாங்கி வரமாட்டானா? என்று அவள் எண்ணுவாள். அவனுக்கோ ஹோட்டலில் சாப்பிட்டுச் சாப்பிட்டு அலுத்துப்போயிருந்தது. அவள் ஏதாவது வீட்டில் செய்யமாட்டாளா, தின்னமாட்டோமா என்று ஏங்கினான். அவளுக்கும் ஏதாவது செய்ய வேண்டுமென்றுதான் ஆசை. கைக்குழந்தையை வைத்துக்கொண்டும், அட்டகாசம் பண்ணும் அந்த மூன்று வயசுப் பையனை வைத்துக்கொண்டு, ஒன்றும் அவளால் செய்ய முடியவில்லை. போதாக்குறைக்கு அந்த மூன்று வயசுப் பையன் அவளை ஒரு நிமிஷமும் விட்டுப் பிரியாமல் கோழியைப் பின் தொடர்ந்து போகும் குஞ்சுபோல் வீட்டில் அவள் போகிற இடமெல்லாம் பின்னாலேயே போய்க்கொண்டிருந்தான். எப்படியோ சமாளித்து அவளும் சமையலைக் கவனித்து வந்தாள். அவனும் சாப்பிட்டுவிட்டு ஆபீசுக்குப் போய்விடுவான்.

அழுது அழுச்சாட்டியம் பண்ணும் குழந்தைகளைத் தூக்கி வைத்துக்கொண்டு அவன் கொஞ்சவில்லையே என்று அவள் குறைப்பட்டாள். பாவம், அவன் தான் என்னசெய்வான்! ஓய்ச்சல் ஒழிவுதான் ஏது? பகல் பூராவும் ஆபீசில் உழைத்துவிட்டு வருகி

றான். வரும்போது ஆபீஸ் கட்டுகளையும் கையோடு தூக்கி வந்துவிடுகிறான். சாப்பிட்டநேரம் தவிர அவனும் அந்தக் கட்டுகளிலே மூழ்கி விடுகிறான். அவனுக்குத் தெரியும் தலைபோகிற காரியம் அதில் இருக்கிறது என்று. ஆனால் அதை அவள் என்ன கண்டாள்? "ஏதோ வெட்டியாக வீண் பொழுதை அதில் ஏன் கழிக்கவேண்டும்? இந்த அழுகிற குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளக்கூடாதா? சாப்பிடுகிற வேளைக்குமட்டும் சாப்பாடு தயாராயிருக்கவேண்டுமென்றால் எப்படி முடியும்?" என்று கடிந்து கொள்வாள்.

அவனுக்கு மட்டும் குழந்தைகளிடத்தில் ஆசையாயில்லை? அவளுக்கும் அது தெரியாமலில்லை. "இந்தக் குழந்தைகளை வைத்துக்கொண்டு, கஷ்டத்தோடு கஷ்டமாய் வீட்டு வேலையைப் பார்த்துச் சமைத்துப் போடறமே, அவர் மட்டும் இதைப்பற்றி ஒன்றும் கவனிக்காமல் நிர்ச்சிந்தனையாக இருக்கிறாரே" என்றுதான் குறைப்பட்டாள்.

அவள் தாய் உள்ளமோ, குழந்தைகளுக்கு ஆடை, ஆபரணங்களைப் பூட்டி அலங்காரம் செய்து பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டது. ஒரு தாய் அதைத்தானே விரும்புவாள்! "அதை வாங்குங்கள், இதை வாங்குங்கள்" என்று சதா நச்சரித்துக்கொண்டிருப்பாள். தினம் இந்தப் பல்லவியை தவறாமல் அவள் பாடிக்கொண்டிருந்தாள். அவன் காதில் அது விழுந்ததோ என்பது சந்தேகம்தான். கையில் நிறையக் காசிருந்தாலல்லவா மனுஷன் அதைப்பற்றிச் சிந்திக்கமுடியும்? அந்தவழியில் மனதைச் செலுத்த முடியும். ஒண்ணாம் தேதி வாங்கும் சம்பளம் எழுபது ரூபாயும் கைக்கும் வாய்க்குமாகவே கரைந்து விடுகிறது. ஐந்தாம் தேதிக்குப் பிறகு கையில் காலணாக் காசுகூட இல்லாமல் போய் விடுகிறது. அதற்குமேல் கடன் வாங்கும் படலமும் ஆரம்பமாகி விடுகிறது.

அவனுக்கு மட்டும், மனைவிக்கு நகை நட்டுகள் பூட்டவேண்டும், நல்ல புடவையாக இரண்டு வாங்கித்தரவேண்டும், குழந்தைகளுக்கு வேண்டியதுசெய்யவேண்டும் என்ற கவலையில்லாமலா போய்விட்டது? அவன் செல்வ நிலைக்குத் தக்கவாறும் அதுவும் அவன் இருதயத்தின் ஆழத்திலே அழுந்தப் புதைந்துபோயிருந்தது.

என்ன நினைத்துத்தான் என்ன பயன்? ரகுவின் மனைவி அவனிடம் சண்டையிட்டுக்கொண்டு போயிருந்தாள். இனிமேல் திரும்பியே வரப்போவதில்லை என்று வேறு சொல்லிப்போயிருந்தாள். அவனும் கோபத்தில் "போய்த் தொலை" என்று ஒரு வார்த்தைக் கடுமையாகச் சொல்லிவிட்டான். அவளும் கிளம்பிவிட்டாள். அந்தச் சமயம் பார்த்து அவளுக்குத் துணையும் கிடைத்தது. எதிர் வீட்டுப் பாட்டி ஊருக்குப் போனாள். அவளும் பாட்டியுடன் கூடவே போய்விட்டாள்.

மீண்டும் அவனுக்கு மனைவியின்மேல் கோபம் கோபமாய் வந்தது. "இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாள். இப்படிகூட அசடாக இருப்பாளோ? ஆசை திருகிற வரைக்கும் அவள் இருந்துவிட்டு வரட்டும்; அல்லது அங்கேயே என்றென்றும் நிலைத்து நின்றுவிடட்டும், நான் போய்க் கூப்பிடப்போவதில்லை. 'வா' என்று ஒரு கடுதாசியும் போடப்போவதில்லை" என்று மனதைக் கல்லாக்கிக்கொண்டிருந்தான்.

அவளுடன் அன்று போட்ட சண்டையை நினைத்தாலே அவனுக்குச் சிரிப்புவந்தது. சண்டைக்குக்காரணம் என்னவோ அற்பமானக் காரணம். அவளும் அந்த வார்த்தை சொல்லியிருக்கக் கூடாது. அவனும் அப்படிக் கடிந்துகொண்டிருக்க வேண்டியதில்லை. என்றைக்கும் சொல்லுகிற சகஜமான வார்த்தைகளைத் தான் சொன்னாள். அவனும் எத்தனையோ தடவை அலட்சியமாகக் கேட்டு விளையாட்டுக்குச் சொன்னதாகத் தள்ளிவிடும் வார்த்தைகள். அன்றைக்கு என்னமோ சந்தர்ப்பப் பிசகாய்ப் போய்விட்டது.

என்றைக்கும் வழக்கமாகக் கொண்டு வருகிற ஆபீஸ் கட்டைப்போல் மூன்று மடங்கு பெரிதாக அன்று கொண்டு வந்திருந்தான். சிவகாமுவே அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு "என்ன இவ்வளவு பெரிய கட்டு" என்று கேட்டிருந்தாள். அவனும் நாளைக்கு ஆபீசில் 'பெரிய துரை' வருகிறார். என் வேலை எவ்வளவோ பாக்கிவிழுந்துவிட்டது. ஒன்றா, இரண்டா, நாலு பிராஞ்சுகளைக் கட்டி எழுதி ஒழுங்குப் படுத்த வேண்டும் இன்று இராத்திரி. விடிந்துபோய்விடுகிறதோ?" என்று கவலையாகக் கூறி கட்டைத் 'தொப்' என்று மேஜையின்மேல் போட்டான்.

இராப்போஜனத்திற்குப் பிறகு ரகு வழக்கம்போல் 'ஆபீஸ் கட்டு' வேலையில் ஈடுபட்டிருந்தான். கைக்குழந்தையோ ஏணையில் தூங்கிக்கொண்டிருந்தது. அந்தச் சிறுபையனோ பாத்திரங்களை உருட்டி அட்டகாசம் பண்ணிக்கொண்டிருந்தான். சிவகாமுவோ சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். அந்தப்பையன் பண்ணின அட்டகாசத்தில் ஏணையில் கிடந்த குழந்தையும் விழித்துக்கொண்டு அழ ஆரம்பித்தது.

உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்த ரகு அந்த ஏணையை ஆட்டிவிட்டு, அதை மீண்டும் தூங்க வைத்திருக்கலாம் அல்லது கையில் எடுத்து அழாமல் அவள் சாப்பிட்டு வருகிற வரைக்கும் வைத்திருக்கலாம். அவனோ இது எதையும் கவனிக்காமல் தன் எழுத்து வேலையிலேயே ஈடுபட்டிருந்தான். பாதி சாப்பிட்டதோடேயே எழுந்திருந்த சிவகாமு, அந்தப் பையனுக்கு முதுகில் 'பளீர்' என்று ஒரு அறை வைத்துவிட்டு, ஏணைக் குழந்தையைத் தூக்கப்போனாள். இப்பொழுது அந்தப் பையனும் வீடே அதிரும்படி வீறிட்டு அழ ஆரம்பித்துவிட்டான். அத்துடன் அவளும் சும்மா இருந்திருக்கலாம். அவள் வயிற்றெரிச்சல் அதிகமாகிவிட்டதோ, என்னவோ, ஏதோ முனகத் தொடங்கினாள்.

"இந்த வீட்டில் நான் ஒண்டியாக உழைத்துச்சாகவேண்டும். எனக்குக் காரியம் பார்க்க வேறு யார் மனுஷாள் இருக்கா? அழுகிறக் குழந்தையைத் தூக்குவதற்கும் நாதியற்றுப் போச்சு இந்த வீட்டில். எல்லாவற்றிற்கும் நான் முட்டிக்கொண்டால்தான் உண்டு. போதுமம்மா! நான் வாழ்ந்தது. ஒரு நகை நட்டுக்கு வழி உண்டா? நல்ல புடவைக்குத்தான் வழியுண்டா, வீட்டிலும், ஆபீசிலும் எழுதறதைத்தான் கண்டேனே ஒழிய வேறென்ன பிரயோஜனத்தைக் கண்டேன்? நான் போய் ஒரு மூன்று மாதத்திற்கு எங்கள் வீட்டில் இருந்துவிட்டுத்தான் வரப்போகிறேன்" என்று உரத்த குரலில் சற்றுக் கடுமையாகவே கூறிவிட்டாள்.

ரகுவிற்கு அவளின் இந்தவார்த்தைகள் சுருக்கென்று பட்டது. அவனை ஈட்டியால் குத்தியிருந்தாலும், சகித்துக்கொண்டிருப்பான். அந்த நிமிஷம் அவளின் வார்த்தை அவன் மனதை மிகவும் புண்படுத்திவிட்டது. என்ன இருந்தாலும் அவன் ஆண் சிங்கம். அவன் மான உணர்ச்சிதான் முன் வந்தது.

"நீ ஒன்றும் பயங் காட்டி மிரட்டிக் கொண்டிருக்க வேண்டாம். போய்த் தொலைகிறதாய் இருந்தால், தொலைந்துபோயேன். இருக்கவே இருக்கிறது ஹோட்டல்" என்று அவனும் கடுமையாகக் கூறிவிட்டான். அவனுக்குத் தெரியும் ஆபீசில் உழைத்துவந்த அலுப்பு. அவனுக்குத் தெரியும் அந்த ஆபீஸ் வேலைகள் முடிய வேண்டுமென்ற கவலை. அவனுக்குத் தெரியும் ஆபீசில் துரை வந்தால், பண்ணும் அட்டகாசம். இவைகள் எல்லாம் சேர்ந்து அவன் கோபத்தையும் அதிகப்படுத்தி விட்டது.

மறு நாள் சிவகாமு தன் தீர்மானப்படியே ஒரேபிடிவாத



மாக எதிர் வீட்டுப்பாட்டியுடன் ஊருக்குக் கிளம்பி விட்டாள். அவனும் "ஏன்" என்று ஒரு வார்த்தைக் கேட்கவில்லை. அவன் கோபமும் அப்பொழுது தணிந்த தாய்த் தெரியவில்லை.

அவள் ஊருக்குப் போயிருந்த அந்த இரண்டு மூன்று நாட்களி லும் அவனுக்குக் குழந்தைகளைப் பார்க்கவேண்டுமே என்று ஒரே ஆவலாகயிருந்தது. அப்பொழுது அழுகிறக் குழந்தையைத் திரும்பி கூட அவன் பார்க்கவில்லை· இன்றே அவனது குழந்தை ஆசை— சாம்பலில் மறைந்துகிடந்த நெருப்புபோல் முன்னிருந்த ஆசை தான்—அதிகமாயிற்று. அந்தக் குழந்தைகளை அப்படியே எடுத்து வைத்துக் கொஞ்ச வேண்டும் போலிருந்தது. வெட்க மறியாதை ஆசை! அந்த ஆசைக் காக அவன் அவளைப் போய் கூப் பிடுவதோ, வரும்படி கடிதம் போடுவதோ முடியுமா?

"இருக்கவே இருக்கிறது" என்று பிரமாதமாக அவளிடம் சொல்லில் பெருமைப்பட்ட ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு ஐந்து நாட்கள் கூட ஆகிவிட்டன. ஒரு இயந்திரம்போல் வீட்டுக்கு வருவதும்; வெளியில் போவது மாகவே இருந்தான். இரவில் தான் அவன் வீட்டில் அதிகநேரம் தங்கியிருந்தான் என்று சொல்ல வேண்டும்.

அன்றிரவு—அந்த ஐந்தாம் நாள் இரவுதான்—வெகு நேரம் வரை தூக்கமில்லாமல் மனதைக் குழப்பிக் கொண்டே படுக்கையில் விழுந்து கிடந்தான். சிந்தனைமேல் சிந்தனையாக ஏற்பட்டுக் கொண் டிருந்தது. பிறகு அப்படியே அசந்து தூங்கிவிட்டான்.

தெருக்கதவைத் தட்டும் சப்தம் கேட்டு விழித்துக்கொண்டான். பொழுதும் விடிந்திருந்தது. காலை யில் மணி ஆறு இருக்கும். கத வைத்திறந்தான்; என்ன ஆச் சரியம்! சிவகாமுவே கைக் குழந்தையுடனும், அந்த மூன்று வயதுக் குழந்தையுடனும் நின்று கொண்டிருந்தாள். அவளுக்குத் துணையாக வந்த அவளுடைய சொந்தப்பாட்டியும் பக்கத்தில் இருந்தாள். பாவம்! இராப்பூரா வும் கண்விழித்து பிரயாணம் செய்து ஐந்தரை மணி வண்டி யில் வந்திருக்கிறார்கள்.

ரகு ஒரே தாவாகத் தாவி அந்த இரண்டு குழந்தைகளையும் இரண்டு கைகளிலும் தூக்கி வைத்துக்கொண்டான்.



விமானக்கூடத்திலிறங்கியதும் பண்டித் நேரு அணிவகுப்பைப் பார்வையிட்டார்.



நாமொன்று நினைக்க——.

ய. மஹாலிங்க சாஸ்திரி எம்.ஏ., பி.எல்.

அன்று சாயந்திரம் ஸ்கூலில் ஒரு காட்சி நிகழ்ச்சி. ஒரு யோகாப்பியாஸி ஆஸனம் முதலான செய்கைகளைக் காண்பித்தார். அந்த நிகழ்ச்சி முடிந்து மாணவ மாணவிகள் வீட்டிற்குத் திரும்பும்போது, விளக்கு வைக்கும் சமயம் ஆகிவிட்டது. செல்லம் கூட்டத்தினின்று பிரிந்து பள்ளித் தோட்டத்தில் ஒரு மாமரத்தடியில் காந்திமதிக்காகக் காத்திருந்தாள். காந்திமதி வரக் கொஞ்சம் தாமதமாயிற்று. செல்லம் மரத்தடியில் தன் புஸ்தக மூட்டைகளை மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள். அன்றய தின ரிக்ஷாவை அமர்த்திக்கொண்டு தான் வீடு செல்லவேண்டும். 'கார்' வந்து பார்த்துவிட்டுத் தாமதிக்க முடியாமல் போய்விட்டது.

ஒன்று தட்டினால் எல்லாம் தட்டுவது வழக்கம். இப்போது காந்திமதியால் தாமதம். நாழி ஆனால் வீட்டிலும் அலுத்துக்கொள்வார்கள், கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். காந்திமதி இதோ வந்துவிட்டேன் என்று வேறு ஒருபெண்ணுடன் "லாபோரட்டரி" பக்கம் சென்றாள். அவளைத் தேடலாமா என்று செல்லம் நினைத்து எழுந்திருக்க யத்தனித்தாள். அப்போது அவள் திடுக்கிடும்படி பின்னேயிருந்து "மிஸ் செல்லம்" என்று ஒரு மெல்லிய குரல் கிளம்பியது. உண்மையில் யாராவது கூப்பிடுகிறார்களா? அல்லது பிரமையா? என்று செல்லம் திரும்பிப்பார்த்தாள். கூப்பிட்ட குரல் பெண் குரலாகத் தோன்றவில்லையே! தான் இருட்டும் சமயத்தில் தனியே இருப்பது எவ்வளவு மதியீனம்! —யார்! கே. முத்துசாமி அல்லவா? இதென்ன ஆச்சரியம்! மெல்ல அணுகுகிறானே! என்ன வேண்டும் இவனுக்கு?

செல்லம் திரும்பிப்பார்த்ததும், முத்துசாமி என்பவன் ஏதோ கெஞ்சிக் கேட்கிற பாவனையாய், முகத்தில் பரிதாபத்துடன் மான் குட்டியை நயந்து அழைக்கும் ரிஷிகுமாரன்போல் விரல்களைக் குவித்து வலதுகையை நீட்டி முன்வளைந்து அடிமேல் அடி வைத்து மிக்கச்சம்சயமும் பயமும் உள்ளவனாய் மெல்ல மெல்ல மரக்கிளைகளிடையே நகர்ந்து வந்துகொண்டு "மிஸ். செல்லம்! நீ தனியே இருப்பதைப் பார்த்து வந்தேன், நல்லவேளை, ஒரு சிறிய வேண்டுகோள்" — என்று ஆரம்பித்தான். அவளை பயப்படுத்தி விரட்டி விடாமலிருப்பதற்காக அவ்வளவு நடை பாவனை, சொல் நயங்களை அவன் வரவழைத்துக்கொண்டதாய்த் தோன்றிற்று.

செல்லத்திற்குச் சிரிப்பு ஒரு பக்கம், பயமொருபக்கமுமாக இருந்தது. சிரிப்புத்தான் முந்திக்கொண்டது. முத்துசாமியிடத்தில் என்ன பயம்? பள்ளிக்கூடத்தில் அவனைப்போல் சாதுப்பையன் வேறு ஒருவனும் கிடையாது. ஆயிரம் கிராப்புத்தலைக்கு நடுவில் அவன் ஒரு அழகிய குடுமித் தலையன். சில சமயம் கழுத்தில் ருத்ராக்ஷம் தரித்திருப்பான். நெற்றியில் கீறு சந்தணம் இல்லாமல் பள்ளிக்கு வரமாட்டான். பள்ளியில் டிபன் சாப்பிடுவதுகூடக் கிடையாது. தான் தோய்த்து நீர்க்காவி ஏறிய தூய வேஷ்டியைத்தான் அவன் உடுப்பது, சட்டையைக் கூடத்தோய்த்துப் போட்டுக்கொள்ளுகிறானோ என்று தோன்றும்! பள்ளி மாணவ மாணவிகள் அவனைப் பரிகசிக்க அஞ்சுவதில்லை. அவனுக்குக் "கி. மு" (கிறிஸ்து காலத்திற்கு முற்பட்டவன்) என்று பெயர் அவர்களால் வழங்கப்பட்டது. அவன் காதில் முத்துக்கடுக்கன் போட்டிருந்தான். அவனுக்கு ஒரு மூக்குக் குத்தப்பட்டுத் துந்துபோயிருந்தது. அவனை "முத்துக்கடுக்கன்" என்றும், "முத்தம்மா" என்றும் மாணவர்கள் கூப்பிடுவார்கள். மாணவிகள் இந்தப் பரிகாசங்களில் நேரில் கலந்துகொள்ளாவிட்டாலும், சிரிக்கும் மாணவர்களுடன் அவர்களும் கலந்து சிரிப்பார்கள். பெண்களை சிரிக்கச்செய்யவே மாணவ தூர்த்தர்கள் "முத்தம்மா"வை அதிகம் புரளிபண்ணத் தொடங்குவார்கள்.

முத்துசாமி இதையெல்லாம் பொருட்படுத்துவதே கிடையாது. தன்னால் சிலர் வினோதமனுபவிக்கின்றனர் அல்லவா? என்று சமாதானம் சொல்லிக்கொள்வான். ஆனால் முத்துசாமி மன உறுதி உள்ளவன். அவன் அந்தரங்கத்தைப் பரிசோதித்தால், தன்னை ஏளனம் செய்பவர்களிடம் அவனுக்குப் பரிதாபமே ஒழிய வெறுப்பு கிடையாது. "ஐயோ சிறு வயதில் இவர்கள் தரிதலைகளாகி விடுகிறார்களே! நல்ல பழக்கம் அடக்கம் ஒடுக்கம், மட்டு மரியாதை, நன்மை தீமை, அகண்ட மனோபாவம், உயர்ந்த கருத்துகள், உன்னத லட்சியம் ஒன்றுமில்லாமல் வீணாகத் தான் தோன்றித்தனமாய் வளர்ந்து வருகிறார்களே! தங்களிடம் பரிகசிக்கத்தகுந்த ஊழல்கள் நூறு

பிரத்தை வைத்துக்கொண்டுஅந்த ஸ்மரணேயே இல்லாமல் பிறரைப் பரிகசிக்க முன் வரும் முட்டாள்களாகவிருக்கிருர்களே! இவர்கள் என்ன தத்துவத்தைக் கண்டார்கள்! என்ன முடிவை அறிவார்கள்! என்ன ஹிதத்தை உணர்ந்தார்கள்! இவர்களெல்லாம் இப்படியே அவிவேகிகளாய் வளர்ந்து ஊர் மக்களானல் "உலகம் சீர்கேடான நிலமைக்கு வராமல் எப்படியிருக்கும்? ஐயோ பாவம்! வாழ்க்கைப் பலனை அனுபவிக்க உதவாத இவர்கள் படிக்கும் படிப்புதான் என்ன பிரயோஜனம்! இன்னமும், அவிவேக சிஷ்யர்களுக்கு அந்தக் குருக்களும் ஏற்பட்டுவிட்டால்—"என்றெல்லாம் அனுதாபத்துடன் சிந்திப்பான். முத்துசாமியிடம் உபாத்தியாயர்களுக்கும், படிப்பில் சிரத்தையுள்ள நல்ல மாணவர்களுக்கும் அபார மதிப்பு உண்டு. முத்துசாமி எளிய வாழ்க்கையும், தூய நன்னடத்தையும், உயரிய மனேபாவமும், உடையவனுயிருப்பதுடன் ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம், கணக்கு முதலிய பாடங்களில் தன் வகுப்பிற்குமேற்பட்ட விற்பத்தியுடையவனுயிருந்தான். எந்தப் பரீட்சைகளிலும் முதல் மார்க்குகள் அவனுடையவையே. கண்ணுக்குக் குளுமை தரும் அழகிய சாந்தமுக வசீகரமுடையவன். உடல் நிறம் தாழம்பூவை ஒத்தது. வினய சம்பத்து அளவற்றது. அவனுடைய சாத்விகத் தன்மையும், ஆடம்பரமற்ற தோற்றமும், பிறர் உவப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தாத கம்பீரமும், அவனை ஒரு ஒப்புயர்விலா மாணிக்கமாக எடுத்துக் காட்டின. அவனைப் பார்த்து நகைக்கும் பிள்ளைகள் அவனிடம் அவமதிப்பைக் காண்பித்தாலும் அவன் பெற்ற படிப்புப் பெருமையையும், முதியவர் மதிப்பையும் மறக்க முடியாமல் மனதில் வேதனையுற்றனர். அவன் வெளித் தோற்றப் பரிகாசத்தில் கலந்து கொண்ட இளம் பெண்கள் அவன்பால் உண்மையில் எழும் உணர்ச்சியின் ஸ்வரூபத்தை மறைக்க அதை ஒரு உபாயமாகக் கையாண்டார்கள். அவனைப் பார்த்து அதிகம் சிரித்த பெண்தான் அவனைப் பற்றி அதிகம் சிந்தித்தவள்.

முத்துசாமி மிக்க ஏழைக் குடும்பத்தில் உதித்தவன். கிருஷ்ண தீக்ஷிதர்என்ற அவன் தகப்பனர் ச்ரௌதம், தர்ம சாஸ்திரம் இவைகளில் பிரக்யாதி பெற்ற வித்துவான். அக்னி பரிசர்யை செய்துகொண்டு கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டித்து வந்து இறுதியில் "மஹாதேவானந்தர்" என்ற புண்ணிய நாமத்துடன் ஸந்யாஸம் பெற்றுக்கொண்டு இதற்கு முன் வருஷத்தில் மோக்ஷ ஸாம்ராஜ்யமடைந்தார். அதனல் முத்துசாமியின் படிப்பு பாதிக்கப்பட்டது. தகப்பனரின் வியோகம் பரீட்சை சமயத்தில் ஏற்பட்டபடியால் அவன் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு ஒரு வருஷம் போகமுடியாமல் மறு வருஷம் அதே வகுப்பில் படிக்கும்படி நேரிட்டது. தகப்பனர் இருந்த வரையில் அவனுக்கு ஏதோ கொஞ்சம் பணம் அனுப்பி வந்தார். அதைக்கொண்டு அவன் தகப்பனரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி ஒரு கிருஹஸ்தர் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு படித்து வந்தான். நடை முதல் வருஷத்தில் அந்த ஏற்பாடு நீடிக்க வசதியில்லை. ஆகையால் அவன் வேறு ஏற்பாடு செய்துகொள்ள நேர்ந்தது. அவனுடைய பந்து ஒருவன் காலேஜ் லெக்சரராக வந்து சேர்ந்தான். அவன் "சிவ ஸகந்த சர்மா" என்ற பெயருடையவன். அவன் விவாஹமாகாதவன். தனி ஜாகையில் குடிப்புகுந்தமையால் தனக்கு உதவியாய் இருக்கும்படி முத்துசாமியைத் தன்னேடு வசிக்கச் செய்துகொண்டான். ஹோட்டலிலிருந்து சாப்பாடு வீட்டிற்கு வரவழைத்து அதை இருவரும் சாப்பிடுவார்கள். வினய குணம் மிகுந்த முத்துசாமி, சர்மாவின் ஏவல்களைச் செய்வான். சர்மா நவீனப் பித்துப் பிடித்தவன். அவன் அனுசாரங்கள் பல. ஆனுலும் முத்துசாமியிடம் அன்பும், மதிப்பும் அவனுக்கு உண்டு. முத்துவுக்கு உத்வேகம் தராதிருப்பதற்காக சர்மா அவனெதிரில் சிகரெட் ஊதுவதில்லை. சர்மாவின் போக்கு முத்துசாமிக்குப் பிடிக்காதபோனலும் எதையும் பொறுத்துக்கொண்டு தன் கருமமே கண்ணுயிருந்தான்.

செல்லம் முத்துசாமியைத் தன் கூரிய பார்வையால் ஒரு முறை அளந்தாள். "நான் தனியே இருப்பதைப் பார்த்து நீர் வருவது முறையல்லவே! நீர் இப்படிப்

பேசுவது ஆச்சரியமாயிருக்கிறது''

"என்னைப் பார்த்தால்தான் எப்போதும் உங்களுக்குப் பரிகாசமாயிருக்கிறதே! நாலு பேர் மத்தியில் உன்னிடம் நான் பேசினுல் அன்று முதல் என்னைப் பசங்கள் பிலாப்பழத்தை ஈக்கள்போல் மொய்த்துக்கொண்டு விடுவார்களே! ஆதலால்தான் நீ தனியே இருக்கும் சமயம் பார்த்து வந்தேன்.''

"நன்றுய் வந்தீர்! ஏன் வந்தீரோ?" செல்லத்திற்குப் பரிகாசச் சிரிப்பு பொங்கிவந்தது. முத்துசாமி நிற்பதையும் அவன் பேசுவதையும், தன் தனி நிலைமையையும் நினைத்து அவள் "களுக்" என்று சிரித்துவிட்டாள். சிரிப்பவர்கள் எல்லாம் சந்தோஷத்தில்தான் சிரிப்பார்கள் என்று சொல்லுதல் கூடாது. கோபச்சிரிப்பு, கபடச் சிரிப்பு, ஏளனச்சிரிப்பு, வெறிப்புச்சிரிப்பு, பயச்சிரிப்பு, துக்கச் சிரிப்பு என்று பலவகையும் உண்டு. செல்லத்தின் சிரிப்பு எவ்வகையானது என்பது ஆராய்வதற்குரியது.

''உனக்குச் சிரிப்பாயிருக்கிறது என்னைப்பார்த்தால்! ஆம்; நியாயம்தானே'' என்று முத்துசாமியும் இலேசாய்ச் சிரித்துக்கொண்டான்.

செல்லம் சிரிப்பிலிருந்து குறிப்பைமாற்றிக்கொண்டு "நான் இப்போதும் தனியாயில்லையே, இதோ காந்திமதி வந்துவிடுவாளே" என்றுள்.

"மிஸ், காந்திமதியா! அவள் வந்தாலென்ன? அவள் பரம ஸாது—''

"ஆனுல் நான் பொல்லாதவளா?"

"அப்படி நான் சொல்லவில்லையே! ஆனுலும் பெரிய அந்தஸ்து இருந்து அகம்பாவமற்ற தெளிந்த உள்ளமுடைய காந்திமதிக்கு இணையாவார் எவர்?"

"நீ இணையாகமாட்டாய் என்று சொல்லுகிறீர்? அவ்வளவு தானே? நான் பணச் செருக்குப் பிடித்தவளாக்கும்? என்னை இப்படி திட்டுவதற்குத்தான் தனியே இருக்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து வந்திராக்கும்?" செல்லத்தின் மொழிகள் தாத்பரியத்தில் கோபத்தை அடக்கியிருந்தாலும் த்வனியில் கொஞ்சும் கிளியின் இனிமையைக்கொட்டின.

"இல்லவேயில்லை, மிஸ். செல்லம்! அப்படி நினைக்காதே! நான் சொல்ல வந்தது—''

செல்லம் முத்துசாமியின் மற்ற சொற்களை கவனிக்கப் புகுமுன் அவளை ஒரு சுழல் எங்கேயோ அடித்துக் கொண்டு போய்விட்டது. ''மிஸ். செல்லம்'' என்று மூன்றும்தரம் முத்துசாமி தன்னை அழைத்ததிலிருந்து அச்சுழல் ஜனித்தது. முதல் இரண்டு உச்சரிப்புகளில் அதன் சக்தி முதிர்ச்சி அடையவில்லைபோலும். மூன்ருவது உச்சரிப்பில், தரையோடு சுழன்று சுழன்று வரும் ஆகாய விமானம் தரையை விட்டெழும்பி வாயுவேகத்தைத் தோற்கடிக்கும் அபார வேகத்துடன் வானளாவிச் செல்லும் ஒரு உணர்ச்சிபிறந்தது. அதில் இன்பமும் பயமும், உவப்பும் வியப்பும் கலந்து கிடந்தது. —ஏனே?

முத்துசாமி அவள் குறிப்பால் கவனம் தளர்ந்ததை உணர்ந்து வற்புறுத்திப்பேசினுர்—

"நேற்று "நாட்டு வளமும் செய்நேர்த்தியும்" என்ற லைப்ரரி புத்தகத்தை நீ வாங்கிக்கொண்டாயல்லவா?''

"ஆமாம் லைப்ரேரியனிடமிருந்து வாங்கிக்கொண்டேன்''

"சரிதான் அதை நான் நேற்றுத்தான் லைப்ராரிக்குத் திருப்பிக் கொடுத்தேன்.

"அதற்கு நான் ஒரு வாரம் முன்னதாகவே பெயர் கொடுத்திருந்தேன். 'இன்று அதுதிரும்பி வரும். உடனே நீ அதை வாங்கிக்கொள் என்று லைப்பிரேரியன் என்னிடம் காலையில் சொன்னுர். சாயந்திரம் அதை நான் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டேன். ஏன், அதற்கென்ன?''

"ஒன்றுமில்லை நீ வாங்கின புஸ்தகத்தைப் பிரித்துப் பார்த்தாயோ?''

"நான் இன்னும் அதைப் படிக்கவில்லை. சனி ஞாயிறில்தான் படிப்பேன். ஏன்?''

"மெல்லப்படி. அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அந்தப் புஸ்தகத்தில் ஒரு கடிதம் இருந்ததைப் பார்த்தாயோ? என்றுதான் கேட்க வந்தேன்.''

"என்ன கடிதம்? பார்க்கவில்லையே! உம்முடைய கடிதமா?''

''நான் அதில் வைத்திருந்த கடிதம்தான். அதை எனக்குத் திருப்பிக் கொடுத்துவிடு. அதைக் கேட்கத்தான் வந்தேன்.''

"புஸ்தகம் வீட்டிலிருக்கிறது. அதை நான் பிரித்துப் பார்க்கவேயில்லை. கடிதம் இருந்ததும் எனக்குத் தெரியாது.''

''கடிதம் எங்கேயாவது கீழே விழுந்திருக்குமோ?''



சென்ற மாதம் 19-ந் தேதி புதிய டில்லியில் இந்திய சர்க்கார் உணவு மந்திரி ஸ்ரீ. ஜெயராம்தாஸ் தௌலத்ராம் ரிப்ரிஜிரேஷன் அபிவிருத்தி மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசியபோது எடுத்தபடம்.

"விழுந்தால் நான் கவனித்திருப்பேன், கடிதம் அதில் இருந்தது. நிச்சயம்தானா?"

"ஆம் நிச்சயம்தான். அதை நான் உடனே திரும்பப் பெற வேணும். அது ஒரு முக்கியமான கடிதம்."

"நான் பார்த்து அது இருந்தால் நாளைக்குப் பள்ளிக்கூடத்திற்கு அதைக் கொண்டு வருகிறேன்."

"நாளை வரையில் தாமதித்தால் எனக்குக் கெடுதல் நேரிடும். இப்போதே நான் உன் வீட்டிற்கு வருகிறேன், ஸீதாராமனை எனக்கு நன்றாய்ப் பரிசயம் உண்டு. அவனைப் பார்க்க வருவது போல் நான் வருகிறேன். அந்தக் கடிதத்தை எடுத்து என்னிடம் எப்படியாவது கொடுத்துவிடு. தயவு செய். நான் தவறு செய்துவிட்டேன். அது குற்றமாகும் முன் அதை நான் கைப்பற்றிக் கொள்ள வேண்டும்."

"நீர் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை. எதுவாயிருந்தாலும் அந்தக்கடிதம் அந்தப் புஸ்தகத்திலிருந்தால் உம்மிடம் அதை திருப்பிக் கொடுப்பதுபற்றி எனக்கு யாதொரு ஆட்சேபனையும் கிடையாது."

அந்த சமயம் காந்திமதியும் வந்துவிட்டாள். முத்துசாமியைக் கண்டு அவள் பயப்படவில்லை. ஆனால் செல்லத்துடன் அவள் சம்பாஷிப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். அதற்குள் செல்லம் அவளுக்கு விஷயத்தை எடுத்துரைத்தாள். காந்திமதி தன் வீட்டு வேலைக்காரனிடம் அக்கடிதத்தை முத்துசாமியின் ஜாகைக்கு உடனே அனுப்பிவிடுவதாயும், அதற்காக அவன் அலைய வேண்டாமென்றும் சொல்லிப் பார்த்தாள். அவன் அதை அங்கீகரிக்கவில்லை. தானே வந்து வாங்கிக் கொள்வதாய் வற்புறுத்தினான். சரி என்று சம்மதித்து இரு பெண்களும் விடை பெற்றுக்கொண்டு சென்றார்கள்.

இவர்கள் வரத் தாமதமானதினால் மறுபடி "கார்" வந்து காத்துக்கொண்டிருந்தது. இருவரும் அதில் ஏறிக்கொண்டு வீடு சென்றார்கள்.

முத்துசாமி பாதசாரியாய் அவ்வழியே சென்றான்.

(தொடரும்)

கேள்விக்குப் பதில்!

"நீங்க படிக்கிறேளா?, இல்லே உத்தியோகம் பண்றேளா ஸார்?"

"எனக்குக் கல்யாணம் ஆயுடுத்து ஸார்—!"

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

12

சுந்தரரின் சரித்திர ஸாரம்

★

பி. ஸ்ரீ.

நம்பியாரூரர் என்ற சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருநாவலூரில் ஆதிசைவ அந்தணர் மரபிலே பிறந்தவர்; இவரை நரசிங்க முனையர் என்ற அரசர் தம் காதல்-பிள்ளையாக வளர்த்து வந்தார். மணப்பருவம் வந்ததும், நம்பியாரூரருக்குத் தமது சைவ அந்தணர் குலத்திலேயே ஒரு பெண்ணை மணஞ் செய்விக்க வேண்டுமென்று தந்தையான சடையனார் ஏற்பாடு செய்திருந்ததும், சிவபெருமான் அந்த மணத்தைத் தடுத்து நம்பியாரூரர் வேறு குலங்களில் பிறந்த பரவை, சங்கிலி என்ற பெண்களை மணந்துகொள்ளும்படி அருள் செய்தார். இதைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கதையிலுள்ள அதிமுக்கிய நிகழ்ச்சியாகக் கருதலாம்.

தேவாரக் குறிப்புக்கள்

தாம் பிறந்த திருநாவலூரைச் சுந்தரர்,

நாதனுக்(கு)ஊர், நமக்(கு)
[ஊர்;
நரசிங்க முனை அரையன்
ஆதரித்(து) ஈசனுக்(கு)
ஆட்செய்யும்ஊர் அணி
[நாவலூர்

என்று பாடியிருக்கிறார். சங்கிலியாரைத் தாம் மணந்துகொள்ளச் சிவபெருமான் அருள் செய்தார் என்ற குறிப்பும் தேவாரத்தில் காணப்படுகிறது:

பண்மயத்த மொழிப்பாவை,
சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே!

'சடையனவன் சிறுவன்' என்று தமது தந்தையான சடையனார் பெயரையும், 'இசை ஞானி சிறுவன்' என்று தமது தாயான இசை ஞானியாரின் பெயரையும் தனித் தனியாகக் குறிப்பிடுவதோடு, 'நன் சடையன் இசை ஞானி சிறுவன்' என்று பெற்றோர் பெயரைச் சேர்த்தும் குறிப்பிடுகிறார். சுந்தரர், தமது தேவாரத்திலே இவர் சிவபெருமானுக்கு வழி வழித் தொண்டர் என்பதற்கும் தேவாரத்தில் குறிப்புக்கள் உண்டு. சிவபெருமான் இவரைத் தடுத்து ஆட்கொண்டதற்கும் குறிப்பு உண்டு.

'நமக்கு உரிய அர்ச்சனை பாட்டேயாகும்; அந்த அர்ச்சனையை நீ செய்யக் கடவாய்' என்று சிவபெருமானே கட்டளையிடச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய முதலாவது பாட்டென்று பண்டித பாமர ரஞ்சகமாய்த் தமிழ் நாடெங்கும் பிரசித்தமாயிருப்பது:

பித்தா! பிறை சூடீ! பெரு
மானே! அரு ளாளா!
எத்தால் மற வாதே நினைக்
கின்றேன் மனத் துன்னை;
வைத்தாய் பெண்ணைத்
தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருள் துறையுள்
அத்தா! உனக்(கு)ஆளாய் இனி
அல்லேன் என லாமே!

சிதம்பர தரிசனம்

இது திருவெண்ணெய் நல்லூரில் நடந்தது. பிறகு நாவலூர், துறையூர் ஆகிய ஊர்களுக்குச் சென்று பதிகங்கள்பாடிச்சிவபெருமானைத் துதித்த பின் சிதம்பரம் சென்று நடராஜப்பெருமானின் திருக்கூத்தைத் தொழவேண்டும் என்னும் ஆசை எழுந்தது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சிதம்பரப்பிரவேசம் சுந்தரமான சப்த ஜாலங்களுடன் வருகிறது சேக்கிழார் வாக்கிலே:

நாக சூதவகு ளம்சர ளம்சூழ்
நாளி கேரம் இல வங்க நரந்தம்
பூக ஞாழல் குளிர் வாழைமதூகம்
பொதுளும் வஞ்சிபல எங்கும்
நெருங்கி
மேக சாலமலி சோலைக ளாகி,
மீது கோகிலம் மிடைந்து
மிழற்றப்,
போக பூமியினும் மிக்குவிளங்கும்
பூம்பு றம்பணை கடந்து
புகுந்தார்.

[நாகம்-நாகமரங்கள், சூதம்-மாமரங்கள். வகுளம்-மகிழமரங்கள். நாளிகேரம்-தென்னை. நரந்தம்—நாரத்தை. பூகம்—கமுகு. ஞாழல்-குங்கும மரங்கள். மதூகம்-இலுப்பை. பொதுளும்—தழைத்த. வஞ்சி-கொடி. மேக சாலம்-மேகக்கூட்டம். கோகிலம்-குயில். மிடைந்துமிழற்ற-நெருங்கி இனிமையாகக் கூவ. போகபூமி-தேவலோகம். பும்புறம்பணை—பொலிவுடன் விளங்கும் புறத்துள்ள வயல்கள்.]

கொடிமல்லிகை, பாதிரி, சிறு சண்பகம், மல்லிகை, முல்லை, நந்தியாவர்த்தம், அலரி முதலான பூக்களோடுகூடிய நந்தவனங்களைக் கண்டதும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சுந்தரமான உள்ளத்திலே பக்தி மலர்ச்சி பெறுகின்றது.—அந்த உள்ளமும் தூய அழகிய மலர்களோடு மலராக மலர்ந்து விட்டதுபோல:

பன்மலர்ப்புனித
நந்த வனங்கள்
பணிந்து சென்றனன்
மணம் கமழ் தாரன்.

[தாரான்–பூமாலையணிந்த நம்பியாரூரர்.]

தாமரை மலர்களிலுள்ள வண்டுகள் அருகே மலர்ந்திருக்கும் தாழம்பூக்களில் நிறைந்துள்ள மகரந்த வெண்பொடியைப் பூசிக்கொண்டு பறந்து வருவது. 'தூய நீறு புனை தொண்டர்'களை நினைப்பூட்டுகிறது. இயற்கையெல்லாம் இறைவனுக்கு உடல்தானே: எல்லாவற்றையும் சிவமயமாய்க் காணும் பேறு பெற்றவரல்லவா சுந்தரமூர்த்தி சுவாமிகள்?

ஆனந்த கூத்து

சுந்தரரின் நடராஜ தரிசனத்தை வருணிக்கும்போதே, சேக்கிழார் பெருமானும் அந்த மாறிலா மகிழ்ச்சி'யில் பங்கு கொள்கிறார்.

ஐந்துபேர் அறிவும்
கண்களே கொள்ள,
அளப்பருங் கரணங்கள்
நான்கும்
சிந்தையே ஆகக்.
குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே
ஆக,
இந்துவாழ் சடையான்
ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங்
கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள்
திளைத்து,
மாறிலா மகிழ்ச்சியில்
மலர்ந்தார்

[ஐந்துபேர் அறிவு – சுவை. ஒளி, ஸ்பரிசம், ஓசை, மணம் என்பன. இவ்வைந்தும், முறையே வாய், கண், மெய், செவி, மூக்கு என்னும் ஐம்பொறி வாயிலாகத் தம் கடமையைச் செய்கின்றன. கரணங்கள் நான்கு—மனம், புத்தி, சித்தம், அகங்காரம். குணம் மூன்று—ஸாத்விகம், ராஜஸம், தாமஸம். இந்து–சந்திரன். திளைத்து–மூழ்கி.]

என்று அந்த மாறிலா மகிழ்ச்சியைத் தாமும் அனுபவித்து நமக்கும் காட்ட முயல்கிறார்.

நடராஜ தரிசனத்திலே ஐம்பொறி அனுபவங்களும் கண்களில் ஒருமித்து வந்து விடுகின்றனவாம். அளவுக்கு அகப்படாத கரணங்களெல்லாம் சிந்தையே ஆகிச் சிந்திக்கின்றன. குணங்களெல்லாம் ஸாத்விகமாகின்றன. அந்த நடனத்தை 'ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங்கூத்து' என்று நீள நினைந்து பேசுகிறார் ஆசிரியர் சேக்கிழார் பெருமான். அந்த எல்லையற்ற அனுபவத்தை 'கூத்தின் வந்த பேரின்ப வெள்ளம்' என்றும், அந்த அனுபவ ஆனந்தத்தை 'மாறிலா மகிழ்ச்சி' என்றும் குறிப்பிடுவதில் சேக்கிழாரின் நடராஜபக்தியும் இனிது புலனாகிறது.

கவியனுபவம்

இந்தப் பாட்டைப் பாடிப் பாடிப்பின்னிரண்டடிகளின் இசையின்பத்திலே திளைக்கும்போது, நமது உள்ளமும் அந்த 'மாறிலா மகிழ்ச்சி'யில் மலர்ச்சிபெறுவது போலத் தோன்றுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சுந்தரமான பக்திச் சுடர் விளக்கிலே சேக்கிழார் ஏற்றி வைத்துக்கொண்ட கவி—விளக்கு இது.

கனகசபையின் திருவாசற்படிக்கு அருகே தாழ்ந்து எழுந்து தரிசனத்தால் உள்ளக் கமலம் மலர்ச்சி பெற்றதும், நம்பியாரூ

ரர் ஆனந்தக் கண்ணீர் பெருகக் கைகளை உச்சிமேல் குவித்து நிற்கிருர். நின்று பாடிப் பரவுகிருராம். அந்தப்பதிகத்தைச் சேக்கிழார் அனுபவிப்பதைப் பார்ப்போம்,

தெண்ணிலா மலர்ந்த
வேணியாய்! உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த
பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று,
கண்ணில்ஆ னந்த அருவிநீர்
சொரியக்
கைம்மலர் உச்சிமேல் குவித்
துப்
பண்ணினல் நீடி அறிவரும்
பதிகம்
பாடினர் பரவினர் பணிந்தார்.

[தெண்ணிலா—தெள்ளிய நிலா. வேணியாய்—சடையை உடையவனே. வாலிதாம்—மேலான. பரவினர்—வாழ்த்தினர்.]

'பிறவி வேண்டாம்; மோட்சம் வேண்டும்' என்று ஞானிகள் பிரார்த்திக்கிருர்களல்லவா? இந்தச் சிவஞானிக்கோ 'இந்தப் பிறவியே பேரின்பம்' என்று சொல்லத் தோன்றுகிறது நடராஜ தரிசனம் செய்ததும். மண்ணிலே—அதிலும் தமிழ் மண்ணிலே—பிறவி கிடைத்ததால் அல்லவா, சிதம்பர தரிசனம் கிடைக்கிறது? 'தமிழ் நாதன்' என்று சேக்கிழார் போற்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சுந்தர மனநிலை இது.

தோழரும் தூதருமான கடவுள்

சிதம்பரத்திலிருந்து புறப்பட்டுக் கொள்ளிடம் கடந்து, பல திருப்பதிகளையும் தொழுது, தமிழ் பாடித் திருவாரூருக்குச் சென்ருர். இங்கேதான் 'தம்பிரான் தோழர்' என்று பேர்பெற்ருர். இங்கேதான் பரவையாரைக் காதலித்து மணஞ்செய்துகொண்டார். இங்கேதான் நாயன்மார்மீது திருத்தொண்டத் தொகை என்ற பதிகம் பாடி, 'மெய்விளங்கிய அன்பர்களின் மெய்ம்மைக் குடியரசு இது!' என்று விளங்கக் காட்டினர்.

அப்பால் சங்கிலியாரின் மணமும் நடைபெற்றது. சிவபெருமானே சங்கிலியாரின் கனவில் தோன்றி, 'நீ நம்பியாரூரரை மணந்துகொள்வாயாக' என்று சொன்னுராம். மீண்டும் நம்பியாரூரரிடம் வந்து, 'அவளைப் பிரிந்து போவதில்லையென்று சபதஞ் செய்து கொடுப்பாயாக' என்ருராம். மறுபடியும் சங்கிலியாரிடம் தூது போனுராம். பரவையாரிடத்திலும் தூதுபோய் வந்தாராம். 'தம்பிரான் தோழ'ருக்குத் தம்பிரான் தூதுபோன இக்கதையைச் சிவபெருமானுடைய அதிசயக் கருணைக்குச் சான்ருக மதிக்கிறது பக்தியுள்ளம்.

'சிவபெருமானே! போகமும் நீர்: மோட்சமும் நீர்' என்று சுந்தரர் துதித்துத் துன்பம் ஒழியப் பெற்ருர் என்பது, 'சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராண'த்திலுள்ள முக்கியமான கருத்துக்களின் முடிமணியென்று கருதத்தக்கது.

சுந்தரரும் சேரரும்

'தம்பிரான் தோழ'ரான சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் 'சேரமான் தோழர்' என்றும் கூறுவதுண்டு. 'மலையாளம்' என்ற மலைநாட்டை அந்நாளில் ஆண்டுவந்த சேரமான் பெருமாளின் தோழராகவும் இருந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். சேரமான் பெருமாளும் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். இவரையும் சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிட்டிருக்கிருர். இவரது வண்மைச் சிறப்பைக் 'கார் கொண்ட கொடை' (மேகம் போலப் பொழிந்த வண்மை) என்று போற்றியுள்ளார். இச் சேரமான் பெருமாள் ஆழ்வாரான குலசேகரப் பெருமாளுக்குப் பின் சேர நாட்டை ஆண்டவர் என்று ஊகிக்கும் ஆராய்ச்சிக்காரரும் உண்டு.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணு 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

மன்னன் ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்மா

இதுவரையில் . . .

[எட்டாம் நூற்றுண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கிரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக் கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனுபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனே கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறுன். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபை கூட்டி, மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிறுர். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிறுர்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொருமையுண்டாக்குகிறது.]

16

மலையாள ஜோசியர்

கி. பி. எட்டாம் நூற்றுண்டில் சேரநாடு என்ற மலையாளப் பிரதேசமும் தமிழ்நாடாகவே இருந்தது. திருப்பதி முதல் தென் குமரி வரையுள்ள பிரதேசத்தையும் தமிழ்நாடுதான் என்பதை இந்நாளில் ஆந்திரர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கிறுர்களல்லவா? நமது கதை நடந்த காலத்திலோ திருப்பதிக்கு வடகிழக்கிலும் தமிழ்நாடு பரவியிருந்தது. வடபெண்ணையாற்றங்கரையிலுள்ள நெல்லூர் வரையிலும் தமிழர்கள் பரவியிருந்தார்கள். 'நெல்லூர்' என்ற பெயரே தமிழ்ப் பெயரல்லவா?

தமிழகத்தின் வட எல்லையில் இருந்தவர்கள் தொண்டை நாட்டு மன்னர்கள். அவர்களும் ராஜஸிம்ம பாண்டியனுல் வெல்லப்பட்டு, பாண்டிய மகாராஜ்யத்திற்கு அடங்கி வாழ்ந்தார்கள். அந்த மன்னர்களோடு, வெல்லப்பட்டிருந்த மற்ற மன்னர்களும் பாண்டிய ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு யாதொரு கலகமும் செய்யாமல் ராஜஸிம்மனுடன் ஒத்து வாழ்ந்தனர். ஆனுல் சேரநாட்டிலே **சேரலாதன்** என்ற சேரன் மட்டும் இரண்டு தடவை பாண்டியனுல் வெல்லப்பட்டிருந்தும், பாண்டியனுடைய ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள இஷ்டப்படாமல் தென் குமரி முதல் வடக்கே நெல்லூர் வரையிலும் தன்னுடைய ஆதிக்கத்தை எப்படியாவது சூழ்ச்சி செய்து நிலைநாட்டி விடவேண்டுமென்று கனவு கண்டு வந்தான். இவனுக்கு ஜோதிடப் பைத்தியம் அதிகம்.

இத்தகைய பெருங் கனவுகளுக்கு ஆதியில் தூண்டுகோலாயிருந்தவர்கள் ஜோசியர்கள். இக்கனவுகளின் பயனுக நடந்த சதியாலோசனைகளுக்கும் தூண்டுகோலாயிருந்தவர் ஆனந்த தீர்த்தர் என்ற பௌத்த சந்யாசி.

பாண்டிய ராஜஸிம்மன் தன்னுல் வெல்லப்பட்ட அரசர்களையும் நண்பர்களாகவே நடத்தி

வந்தான். அவர்களுடைய தேவைகளை அறிந்து மந்திரி மாறங்காரி மூலமாக உதவி செய்வான்; அல்லது தானே நேரில் போய் உதவுவான். இந்த நற்குணம், சிற்றரசர்களையெல்லாம் உண்மையான பாசபந்தத்தால் பாண்டிய ராஜ சக்கிரவர்த்தியுடன் இறுகப் பிணைத்திருந்தது. ஆனால் சேரலாதனுடைய பேராசையும், ஆதிக்க வெறியும், ஆனந்ததீர்த்தரின் துர்ப்போதனைகளும், பிணைப்பிற்கு மாறாகப் பிணக்கத்தையே அதிகரிக்கச் செய்தன.

சேரலாதனும், ஆனந்ததீர்த்தரும் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள். அம்மதத்தைத் தென்குமரி முதல் நெல்லூர் வரையிலும் பரப்பிவிட வேண்டும் என்பது ஆனந்ததீர்த்தரின் கனவு. அம்முயற்சிக்கும், சேரனுடைய ஆதிக்கக் கனவுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்று இருவரும் நம்பினார்கள்.

இவர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துப் பேசுவதுண்டு. குமரியும், பன்றி நாடும் முக்கியமான சந்திப்புத் தலங்கள். ஒரு சமயம் இவர்கள் மதுரையிலேயே ஒருவரையொருவர் சந்தித்துப் பேசுவதற்கு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஏற்பாடுகளைச் செய்திருந்தவர் ஆனந்த தீர்த்தர்தான். இவருக்கு மதுரையிலும் சீடர்கள் உண்டு. அவர்களெல்லாம் இரகசியமாகச் சந்தித்து ஆனந்த தீர்த்தருக்கும், சேரலாதனுக்கும் உதவியான காரியங்களையும், பாண்டிய சக்கிரவர்த்திக்கு விரோதமான சதியாலோசனைகளையும் நடத்திவந்தார்கள்.

ராஜஸிம்ம பாண்டியன் ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடி ஒரு பரதேசிபோல் மாறுவேடம் பூண்டு மதுரைமாநகரின் வீதிகளில் நள்ளிரவிலே போய்க்கொண்டிருந்தான். ஒரு பெரிய வீட்டு வாசலில் **மலையாள ஜோதிஷசாலை** என்று பெரிய வர்ண எழுத்துக்களில் எழுதியிருந்தது. 'இதற்கு முன் நான் இந்த ஜோதிஷசாலையைப் பார்த்ததில்லையே; இந்த வழியாக வந்தும் இருக்கிறேன். என்ன கவனக்குறைவு! கண் இருந்தும் கண்டேனில்லை!' என்று தனக்குத்தானே பேசுவதுபோல் அரசன் வாய்விட்டுச் சொன்னான்.

அதேசமயம், அந்த வீட்டுக்குள்ளே குத்துவிளக்கின் வெளிச்சத்தில் ஒருவர் உட்கார்ந்துகொண்டு, 'கண்ணான அரசாங்கம் எவ்வளவோ முயன்று பார்த்தும், எத்தனையோ வெற்றிகளை அடைந்தும், இந்த மகாராஜ்யத்திலே இன்னும் அமைதி நிலைபெறவில்லை. சக்கிரவர்த்தியின் நம்பிக்கை தேய்ந்துகொண்டேயிருக்கிறது. சிங்கத்தை யானை முறைத்துப் பார்க்கிறது. பன்றியின் உதவியால் யானைக்குத்தான் வெற்றி கிடைக்கப் போகிறது. இந்த அதிசயத்தை நெல்லூர் முதல், குமரி வரையிலும் பூமகள் கண்டு களிக்கப் போகிறாள்' என்று பிரசங்கம் செய்வதுபோல் தடதடவென்று பேசினார். எதிரே ஒரு சிறு கூட்டம்—சுமார் முப்பதுபேர்—அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது. சிங்கம், யானை, பன்றி என்ற சொற்களை காதில் விழுந்ததும், வடநாட்டுப் பைராகிபோல் வேடம் பூண்டு வந்த பாண்டியன் வீட்டு திண்ணை மறைவில் ஒதுங்கி நின்று கவனிக்கலானான்.

'யாரோ போருக்குத் தயார் செய்துகொண்டிருப்பதுபோலச் சொல்லுகிறீரே; தமது சக்கரவர்த்திக்கு விரோதமாக முயற்சி செய்யும் துணிவு யாருக்குத்தான் இருக்கமுடியும்? இந்த ஜாதகத்தைச் சரியாகப் பார்த்துச் சொல்லும், சாஸ்திரியாரே!' என்று ஒருவன் ஒரு ஜாதகத்தை நீட்டியதையும், அரசன் கவனித்தான். கதவு முக்கால்வாசி சாத்தியிருந்தது.

'வெற்றியும், மேலும் மேலும் சுபிட்சமும் தானே இந்த ஜாதகத்தில் காணப்படுகின்றன? நன்றாகப் பாரும். எனக்கும் ஜோசியம் கொஞ்சம் தெரியும்' என்றது வேறொரு குரல்.

'நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேன். இந்த ஜாதகத்தை—மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் தாங்கள் சொல்கிறபடியேதான் காண்கிறது. ஆனால் உண்மையில் ஜயிக்கப்பட்ட நாடுகளெல்லாம் கீழ்ப்பட்டு நடக்கச் சித்தமாக இல்லை. ஏகாதிபத்தியம் வெறும் பேச்சு, ஏட்டுச் சுரைக்காய்தான்!' என்றார் ஜோதிஷ சாஸ்திரியார்.

'கீழ்ப்பட்டு நடக்க வேண்டுமென்று சொல்லவில்லையே, நண்பர்களாக நடக்கவேண்டும் என்றுதானே இந்த ஜாதகம் எதிர்பார்க்கிறது?' என்று ஜாதகத்தைக் கொடுத்தவன் சொன்னான்.

அதற்கு, அருகேயிருந்தவன், 'அரசியல் பரிபாஷையில் சிற்றரசரோடு நட்பு என்றாலே ஏகாதிபத்தியம்தான்,—அந்த அரசர்களின் கீழ்ப்படிதல்தான்!' என்று பதில் சொன்னான்.

ஜோசியர் சிரித்துக்கொண்டே, ஏதோ வெற்றியென்றும், சமாதானம் என்றும் கனவு காண்கிறது இந்த ஜாதகம். ஆனால் இந்த அமைதிக்கு அடியிலே பயங்கரமான பூசல்களுக்கும், படுகொலைகளுக்கும் அஸ்திவாரம் கிடக்கிறது!' என்றார்.

'மறைவாக நின்று கவனித்துக்கொண்டிருந்த பாண்டியன், 'நமக்கு விரோதமான ஜோஸ்ய சமாசாரமாக அல்லவா இருக்கிறது? இந்தக் குரலை ஏற்கெனவே கேட்டதுபோலவும் இருக்கிறது?' என்று திகைப்புற்று முன்னிலும் கவனமாகச் செவிசாய்த்து நின்றான்.

ஜாதகத்தை ஜோசியரிடம் கொடுத்தவன், 'சென்ற போரின் படுகாயம் இன்னும் எதிரிக்கு மாறவில்லையே; அப்படியிருக்க, வேறொரு பயங்கரமான போருக்கும் துணிகிறவர் உண்டா?' என்று கேட்டான்.

"நான் "போர்" என்று சொல்லவில்லையே; "பயங்கரமான பூசல்களும் படுகொலைகளும்" என்றுதானே சொன்னேன். உண்மையாகப் பார்த்தால் நானா சொல்லுகிறேன்? அரசனுக்கு அரசனாகச் சனி பேசுகிறான். மன்னனுக்கு ஏழரைநாட்டுச் சனி வருவது நிச்சயம். கள்ளர்களாக வருவான்! துறவிகளாகவும் வருவான்!' என்றார் ஜோசியர்.

இப்போது ஜோசியரின் குரல் அரசரின் திகைப்பை அதிகப்படுத்தியது. மந்திரி மாறங்காரிக்குப் பல்வேறு குரல்களை உபயோகிக்கும் விநோத ஆற்றல் உண்டு என்பதை அரசன் அறிவான். ஆனால்.........அப்படியிருக்குமா?

ஜாதகம் கொடுத்தவன், 'அது என்ன திருடரையும், துறவிகளையும் சேர்த்துப் பேசுகிறீர்? இந்த விநோதப் பேச்சின் பொருள் விளங்கவில்லையே. எது எப்படியிருந்தாலும், மந்திரி மாறங்காரியார் இருக்கும்போது மன்னனுக்கும் உண்டோ குறை?' என்றான்.

உடனே அவனுடைய நண்பன், 'தங்களுக்கு உணவு கிடைக்கவும், பிறருக்கு உபதேசம் கிடைக்கவும் அங்குமிங்கும் திரிந்துகொண்டிருக்கும் சந்யாசிகளும் பூசலிடுவார்களா? அஹிம்ஸா தர்மவாதிகள் படுகொலை புரிவார்களா? அதுவும், என் நண்பர் சொல்லுகிறபடி, மந்திரி மாறங்காரி இருக்கும்போதா? பாண்டியனுக்குப் பிரகஸ்பதியல்லவா?' என்று கேட்டான்.

'சரி, சரி, ஆனால் ஜாதகத்தில் மந்திரி மாறங்காரியா? செவ்வாய்! விஷமிகளைத் தூண்டி அமைதியான அரச வாழ்வைக் குலைத்து மந்திரி செவ்வாய் ஏகாதிபத்தியத்திற்கு அபாயம் உண்டாக்கும்போது, மந்திரி மாறங்காரி என்ன செய்வார்?' என்று ஒரு பதில் கேள்வி போட்டார் ஜோசியர்.

"போதாக்குறைக்குப் பொன்னியும் வந்தாள்" என்பதுபோல் ஸ்ரீ விஷ்ணுசித்த சுவாமிகளும் விஜயம்செய்யப் போகிறாரே; அந்த வெற்றியும் ஆசியும் மன்னர்பிரானுக்குப் பயன்படாதா?' என்று ஜாதகம் கொடுத்தவன் கேட்டான்.

அதற்கு ஜோசியர், 'இந்த ஏகாதிபத்தியத்தின் ஜாதகத்திலேயே பக்தர்களுக்கும், ஆஸ்திகர்களுக்கும் கஷ்டம் உண்டு; நாஸ்திகர்களுக்கும் ஆஷாடபூதிகளுக்கும் நன்மை உண்டு!" என்றார்.

'ஆம், அந்த ஜாதகம்தான் இந்த ஜாதகத்தைக்காட்டிலும் முக்கியமானது. ஆனால் அந்த ஜாதகத்தை எப்படிக் கண்டுபிடித்தீர்?' என்று ஆவலாய்க் கேட்டான், பாண்டியனின் ஜாதகத்தை ஜோசியரிடம் கொடுத்தவன். அவனுடைய நண்பனோ 'ஜோசியரின் தூஷணைகளை ஆட்சேபிக்கிறேன்' என்றான்.

'நமது சக்கிரவர்த்தி சேரமன்னனை முதலில் வென்றதும், மதுரையில் ஒருநாள் ஏகாதிபத்திய ஸ்தாபன விழாக் கொண்டாடினார். அதை வைத்துக்கொண்டு இந்த ஏகாதிபத்திய ஜாத

கத்தையும் நான் கணித்து வைத்திருக்கிறேன்' என்று பதில் சொன்னுர் ஜோசியர்.

அந்த விடையைக்கேட்டதும் அங்கே கூடியிருந்தவர்களெல்லாம் கரகோஷம் செய்து அந்த மலையாள ஜோசியரிடம் தாங்கள் கொண்டிருந்த மதிப்பை வெளிப்படுத்தினுர்கள். ஆனுல் அரசனின் ஜாதகத்தைக் கொடுத்தவனும், அவனுடைய நண்பனும் 'மௌனம்' என்று சொல்லி மற்றவர்களின் மகிழ்ச்சியை மட்டுப்படுத்தினுர்கள்.

பிறகு இருவரும் வேருெரு ஜாதகத்தை மெள்ள நீட்டி, முன் கொடுத்த ஜாதகத்தை வாங்கிக்கொண்டார்கள். அதை வாங்கிக் கொண்ட ஜோசியர் சிறிது நேரம் கூர்ந்து பார்த்துவிட்டு 'இதையும் ஒரு ஸ்தாபனத்தின் ஜாதகமாகவே மதிக்கிறேன், புதிய ஸ்தாபனம்; வெற்றியுண்டு, மகிழ்ச்சி மிகுதி' என்ருர். மறுபடியும் அவர்களை நோக்கி, 'பலாப்பழத்திற்கு ஈக்களைப் பிடித்துவிடவேண்டுமா? எத்தனை பேர் தாமே வலிய வந்து மொய்த்திருக்கிருர்கள் குமரிமுதல் பன்றிநாடு வரையிலும்! வெற்றி வந்துவிடும், வந்துவிடும், என்று முன்னிலும் உரத்த குரலில் சொன்னுர்.

இரண்டாவது 'வந்துவிடும்' என்பதைக் கதவின் ஓரமாக வெளியே நோக்கிச் சொன்னுர் ஜோசியர். அந்த மலையாள ஜோசியர் மாறுவேஷக்காரி தான் என்பது இதற்குள்ளே அரசனுக்குத் தெளிவாகி விட்டது. எனவே, அவர் 'வந்து விடும்' என்று தன்னை நோக்கிச் சொன்னதும், தான் ஒதுங்கியிருப்பதைத் தெரிந்துகொண்டே மந்திரி தன்னை உள்ளே வரச் சொல்லுகிருர் என்பது அரசனுக்குப் புரிந்துவிட்டது.



பரதேசிக் கோலத்திலிருந்த பாண்டியன் உள்ளே வந்ததும், 'பைராகி ஸ்வாமி! அப்படி அமரவேணும்' என்று, விளக்கு வெளிச்சம் நன்கு விழாத ஓரிடத்தைச்சுட்டிக்காட்டினுர் ஜோசியர்.

இந்தப் புதியவரைப் பார்த்ததும் கூட்டத்திலிருந்த ஒருவன் மெள்ள எழுந்து, அவசர வேலை, போய் வருகிறேன்' என்று வெளியே போய்விட்டான். அவன்தான் ஜோசியரிடம் ஜாதகம் கொடுத்துப் பார்க்கச் சொன்னவனின் நண்பன் அந்தக்குரலை வைத்துக்கொண்டு அந்த ஆசாமிதான் ஆனந்த தீர்த்தரோ?' என்று சந்தேகித்துக்கொண்டிருந்தான் அரசன். ஆனுல் இப்போது வெள்ளைத் தாடியுடன் தூய வெண்ணிற உடையில் பார்த்ததும் 'இவர் வேறு யாரோ?' என்று எண்ணினுன். எனினும் அந்த ஆசாமி இவ்வளவு அவசரமாகப் போவானேன்?

'சரி, சரி; மந்திரியைத் தெரிந்துகொள்ளவில்லை; நம்மைத் தெரிந்துகொண்டு நழுவிப் போகிருர்' என்று ஒரு கணம் நினைத்தான் அரசன். அடுத்த கணமே, 'அப்படியானுல் மந்திரியார் ஆசாமியை இப்படித் தப்ப விடுவாரா?' என்ற நினைப்பும் வந்தது. எனினும் அந்த மனிதனுடைய குரல் ஆனந்ததீர்த்தரின் குரல் போலத்தானே இருந்தது?

மலையாள ஜோசியரோ புதிய ஜாதகத்தைப் பார்த்துக்கொண்டே, 'சேனுதிபதி வில்லி' என்று சொன்னதும், திடுக்கிட்டான் ஜாதகம் கொடுத்த ஆசாமி. ஜோசியர், 'சேனுதிபதி சந்திரன்' என்று தம்மைத் தாமே திருத்திக்கொண்டு, 'சுதந்திரம், பூர்ண சுதந்திரம், பரிபூர்ண ஏகாதிபத்தியம், கொள்ளை வீரர்களுடன் கூட்டு வெற்றி' என்ருர்.

பிறகு கிரகங்களுக்கெல்லாம் சக்கிரவர்த்தியான சூரியன் அதிகாரம் இழந்திருப்பதையும், சனி, செவ்வாய் என்ற பாபக்கிரகங்கள் மறை

வான சூழ்ச்சிகளில் ஈடுபடுவதையும் விவரித்தார். அப்பால் அவர், 'சூரிய கிரகண காலத்தில் தங்கள் முயற்சிகள் பயங்கரமாக அதிகரிக்கும், உச்சநிலை அடைந்து வெற்றி பெறவும் கூடும்' என்று சொல்லி, ஜாதகம் கொடுத்தவனின் முகத்தைப் பார்த்தார்.

இப்போது 'அவன் சேரனுகத்தான் இருக்கக் கூடும்' என்று எண்ணினுன் பைராகி வேடத்திலிருந்த பாண்டியன். பைராகி உள்ளே வந்ததும் ஆனந்ததீர்த்தர்—ஆம், அவர் ஆனந்ததீர்த்தர் தான் வெளியே போனுரே, அது தனக்கும் ஒரு எச்சரிக்கையென்று எண்ணினுன் மாறு வேடத்திலிருந்த சேரன். 'நாம் மலையாள ஜோசியரென்று நம்பிய ஆசாமியும் மாறு வேடத்தில் நம்மை ஏய்க்க வந்தவன்தான்' என்ற சந்தேகமும் தோன்றிவிட்டது சேரனுக்கு. 'என்ன ஆபத்து வந்துவிடுமோ?' என்ற அச்சமும் ஏற்பட்டது.

ஆனுல் ஆனந்ததீர்த்தரின் அறிவுக்கூர்மையிலும், அமானுஷ சாமர்த்தியங்களிலும் சேரனுக்கு நம்பிக்கை அதிகம். ஆகவே மனத்துணிவுடன் தன்னைத் தைரியப்படுத்திக்கொண்டு மெள்ள வெளியேறிவிடலாமா என்று ஆலோசித்தான்.

அவனுடைய அந்த எண்ணங்களையெல்லாம் முகத்தைப் பார்த்தே ஒருவாறு உணர்ந்து கொண்டார் ஜோசியர்—வேஷத்தில் இருந்த மாறங்காரி. உடனே அவர், 'இந்தப் பைராகி என்னை அழைத்துப்போக வந்திருக்கிருர். உத்தர தேசத்துப் பிரபு ஒருவர் சொக்கர் கோவிலுக்கு அருகே தங்கியிருக்கிருர்; அவருடைய ஆள் தான் இவர். நாளையே சேதுவுக்குப் புறப்படுகிருர்கள். நான் போய்வருகிறேன், மன்னிக்க வேணும்' என்று சொல்லிவிட்டு, பைராகிக்குச் சைகை செய்தார். இருவரும் வெளியே போய் விட்டார்கள். அப்பால் அந்த இடத்திலிருந்து சேரனும் பிறரும் சில நிமிஷங்களில் வேறு எங்கேயோ போய்விட்டார்கள்.

மாறுவேடத்திலிருந்த பாண்டியனும் மாறங்காரியும் வெளியே வந்ததும், குறுக்கு வழியாக ஓர் ஒற்றன் வீட்டுக்குப் போய்த் தங்கள் வேடங்களை மறுபடியும் மாற்றிக்கொண்டார்கள். இருவரும் இப்போது உத்தரதேசத்து வியாபாரிகளைப்போல் வேடம் பூண்டுகொண்டார்கள்.

'இனி நாம் எங்கே போகலாம்? செல்வநம்பிகளைப் பார்க்கவேண்டாமா?' என்று கேட்டான் அரசன்.

'விரைவில் போவோம். நரஸிம்மனையும் அழைத்துக்கொண்டு போகலாமே' என்றுர் மந்திரி.

'அவன் இப்போது எங்கே இருக்கிருனே, எப்போது வருவானே?'

'இப்போது ஆனந்ததீர்த்தரை தொடர்ந்து போயிருப்பான்.'

'அவனுக்கு இன்றிரவு நடந்ததெல்லாம் எப்படித் தெரியும்?'

'அவனுக்குத் தெரியலாமா எனக்குத் தெரிந்தது? அவன்தான் மலையாள ஜோதிஷசாலையில் எனக்கு உத்தியோகம் கொடுத்தவன். சதிகாரக் கும்பலை அங்கே அழைத்து வந்தவனும் அவன்தான். தங்களை அங்கே அழைத்து வந்தவனும் அவன்தானே, தெரியாதா?'

பாண்டியன் ஒரு கணம் பிரமித்தான். பிறகு ஞாபகம் வந்துவிட்டது. தன் காதில் விழும்படி ஒருவன் வடக்கு மாடவீதியில் யாருடனே கூட்டம் நடந்த வீட்டுப் பக்கத்தைக் குறிப்பிட்டு 'அங்கே ஏதோ திருடர் பயமென்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள்!' என்று சொல்லவில்லையா? அதைக் கேட்டுத்தானே பாண்டியன் அந்தப் பக்கமாகப் போனுன்?'

நரஸிம்மனும் வந்து சேர்ந்தான். 'அன்றிரவு நடக்க இருந்த சதியாலோசனையை நடக்கவொட்டாதபடி செய்யத்தான் நான் என் ஜோசியக் கடையை விரித்தேன்' என்றுர் மந்திரி. அரசன் அதன் விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினுன். சதியாலோசனை நடைபெறும் சமயத்தில் குற்றவாளிகளைப் பிடித்துக்கொள்ளாமல், அவர்களை அப்படித் தப்பவிட்டதற்குத் தகுந்த காரணம் இருக்கவேணுமே—அதையும் அரசன் தெரிந்துகொள்ள விரும்பினுன்.

'நேரமாகிவிட்டதல்லவா? செல்வநம்பியிடம் விரைந்துபோவோம். இந்த விஷயங்கள் அவருக்கும் தெரியவேண்டியவைதான். சுருக்கமாகச் சொன்னுல், வித்வத்சபையைக் கூட்டுவதற்கு விரைவில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். அந்தச் சபைக் கூட்டம் இனிது நடைபெற வேண்டும். அதற்காகத்தான் இப்போது இந்தச் சதிகாரக் கூட்டத்தை விட்டு வைத்திருக்கிருேம். பௌத்தர்களும் அக்கூட்டத்திற்கு வரவேண்டுமல்லவா?' என்றுர் மாறங்காரி.

மூவரும் செல்வநம்பியிடம் சென்றுர்கள். அரசனுக்கு இப்போது ஒரே ஒரு கவலை; வித்வத்சபைக்காவது, விஷ்ணுசித்தருக்காவது ஒரு விபத்தும் ஏற்படக்கூடாது என்பதுதான். அந்தப் பெருங்கவலையை அரசனுள்ளத்திலிருந்தே வாசித்துக்கொண்ட மந்திரி, 'அதற்கு நம்முடைய நரஸிம்மனும், அவனைச் சேர்ந்த ஒற்றர்களும் பொறுப்பாளிகள்' என்றுர்.

(தொடரும்)

வைர வளையல்

—கோமதி சுப்பிரமணியம்—

மாணிக்கம் சேட் கடையில் தொங்கிய அந்த மூன்று மாலைகளின் பளபளப்பும் பகட்டும் ஒன்றையொன்று போட்டியிட்டுக்கொண்டு கண்ணைப் பறித்தன.

அவற்றுள் எது சிறந்ததென தேர்ந்தெடுக்க முடியாமல் திணறினாள் சகுந்தலா. அரைமணி நேரமாக ஒன்று மாற்றி ஒன்றாக கையிலெடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாளே தவிர குறிப்பிட்ட ஒன்றை எடுத்துக்கொண்டு புறப்படுகிற வழியைக் காணோம்.

“என்ன சகு நீ தவிப்பதைப் பார்த்தால் மூன்று மாலைகளையும் விட்டுவர மனமில்லைபோலிருக்கிறதே. மூன்றையும் வாங்கிவிட உத்தேசமா?” என்று பரிகாசமாகக் கேட்டான் அவள் கணவன் நாகராஜன்.

“இல்லை, ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறந்ததாக இருக்கிறதே ஏதை எடுப்பதென்று புரியவில்லை. நீங்கள்தான் சொல்லுங்களேன். நம் கண்ணனுக்கு எது எடுப்பாக இருக்குமென்று?”

“நடுவில் பச்சைக்கல் பதித்த மாலையை வாங்கலாமென்பது என் அபிப்பிராயம். உன் இஷ்டத்தைப் பார்த்துக்கொள்” என்று ஒருவகையாக அவளது தீராத பிரச்னையை தீர்த்து வைத்தான் நாகராஜன்.

கணவனின் கட்டளைப்படியே மாலையைக் கையிலெடுத்துக் கொண்ட சகுந்தலா பின்னும் சற்றுத் தயங்கி நின்றாள்.

அதை அவன் கவனிக்கவில்லை, “என்ன சகுந்தலா புறப்படலாமா?” என்று கேட்டபடியே காரை நோக்கி நடந்தான். கணவன் புறப்பட்டு விட்டபடியால் ஏதோ சொல்ல நினைத்ததை சொல்லாமல் அவனைப் பின் தொடர்ந்து வந்து ஸீட்டில் அமர்ந்தாள்.

கார், வசந்த விலாசத்தை நோக்கி வேகமாகப் பறந்து சென்றது. வீட்டையடைந்ததும் முதலாவதாகத்தான் வாங்கி வந்த மாலையை குழந்தை கண்ணனுக்கு அணிந்து பார்த்து மகிழ்ச்சியடைந்தான் நாகராஜன். வழக்கம்போல் அவனுடைய ஆனந்தத்தில் சகுந்தலா பங்கெடுத்துக் கொள்ளாதது அவனுக்குப் பெரிதும் வியப்பாகவே இருந்தது. ‘ஏன் சகுந்தலா ஒரு மாதிரியாக இருக்கிறாயே. மாலை உனக்குப் பிடிக்கவில்லையா?’

‘பிடித்தமில்லாமல் வாங்கி வருவேனா’ என்று சிரித்து மழுப்பினாள். ‘பின்னே என்ன யோசனை. வழக்கம்போல் கலகலப்பாயிராமல் ‘உம்’ என்றிருக்கிறாயே காரணம்.’

- ஒன்றுமில்லை என்று சொல்லிவிட்டு அவனை விட்டு அப்பால் செல்ல முயற்சித்தாள்.

‘காரணத்தைச் சொன்னாலொழிய அப்பால் போகவிட மாட்டேன் சகு’ என்று வழியை மறித்துக் கொண்டான் நாகராஜன்.

விடாப்பிடியாக பிடிக்கவே மெதுவாக விஷயத்திற்கு வந்தாள். சேட் கடையில் இந்த மாலையை எடுத்தோமே. அதனருகில் இரண்டு ஜோடி வளையல்கள் இருந்ததே கவனித்தார்களோ. ஒன்று நீலம், இன்னொன்று வைரம். ‘பேட்டர்ன்’ ‘எவ்வளவு அழகாய் இருந்தது...’

‘பூ இதை சொல்வதற்குத்தானா இந்தப் பாடு. நீ ஒரு சுத்த அசடு. இந்த விஷயத்தை கடையில் வைத்தே சொல்வதற்கென்ன? அப்பொழுதே வாங்கியிருக்கலாமே......

‘வாங்கச் சொல்லவில்லை. பார்த்தீர்களோ என்றுதான் கேட்டேன்.’

இப்பொழுதென்ன கெட்டுப் போனது? சாயந்திரம் கம்பெனிக்குப் போய்விட்டு வருகிற பாதையில் அந்தப்பக்கமாக வந்து வாங்கி வந்தால் போச்சு. இதற்குத்தானா தேவிக்கு இத்தனை யோசனை! நேரமாகிவிட்டது. போய் வரட்டுமா என்று கம்பெனிக்குப் புறப்பட்டான்.

சகுந்தலாவுக்குத்தான் காண்பதெல்லாம் கனவா, நனவா என்பது சந்தேகமாகவே இருந்தது. தனக்கு இதுமாதிரியான பாக்யம் கிடைக்குமென்று அவள்கனவிலும் நினைத்திருக்கவேயில்லை. இதே நாகராஜனை மணப்பதைவிட ஆற்றில் விழலாமென்று நினைத்த காலமும் உண்டு. ஆனால் அப்பொழுதிருந்த நாகராஜனா இப்பொழுது காலப்போக்கில் எப்படி மாறிவிட்டான். இந்த மாறுதலுக்கெல்லாம் காரணம் யார்?

அவள் மனம் பழைய நிலையை நினைத்துப் பார்க்கத் தொடங்கியது.

2

சகுந்தலா அப்பொழுது கம்பெனி மானேஜர் நாகராஜனின் மனைவி அல்ல. மாதம் 30 ரூபாய்

சம்பளம் வாங்கும் ஏழைக் குமாஸ்தாவின் மகள்தான். சிறு வயதிலேயே தாயை இழந்துவிட்ட அவள், தகப்பனுரையும், தம்பியையும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. தந்தையின் சொற்ப வருமானத்தில் குடித்தனம் நடத்தி வந்தார்கள். அத்தனை பாங்காக குடும்பம் நடத்துவதைக் காண பகவானுக்குப் பொறுக்கவில்லைபோலும். அக்காவையும், தம்பியையும் நிராதரவில் விட்டுவிட்டு தந்தையும் தன் மனைவியைப் பின்பற்றிப் போய்விட்டார். இனி வாழ்க்கை நடத்துவதெப்படி? இந்த விசாரத்திலேயே சகுந்தலா இடிந்து போய்விட்டாள்.

எப்படியோ ஒரு வகையாக தனக்குத் தெரிந்த தையல் பின்னல் வேலைகளை வைத்துக் கொண்டு அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழிதேடி வயிற்றை நிரப்பி வந்தார்கள்.

இந்தச் சமயத்தில்தான் அந்த ஊரில் புதிதாக ஒரு சோப் கம்பெனி ஆரம்பிக்கப்போவதாக வதந்தி எழும்பியது. அந்த வதந்தி ஊர்ஜிதமாகவே, அவ்வூரில் வேலை கிடைக்காமல் அலைந்த பலரும் அக்கம்பெனியை சரண்புகுந்தார்கள். அவர்களுள் சகுந்தலாவின் தம்பி கந்தசாமியும் ஒருவன்.

கந்தசாமி கொண்டு வருவது பதினைந்து ரூபாய்காசுதான் என்றாலும் அதிலும் குறைந்த வருவாயிலும் காலம் கடத்திய பழக்கத்தின் காரணமாக தம்பியின் வருமானத்தைப் பெரிய புதையலென போற்றினுள் சகுந்தலா. அதிலேயே ஒன்றிரண்டு மீதம் வைத்து தம்பிக்கு வேண்டிய துணிமணிகள் வாங்கிக்கொடுத்து அவனுக்கு உற்சாகமூட்டிவிடுவாள். நிறைந்த மனதுடைய சகுந்தலா அதிருஷ்டதேவதை புன்னகை பூத்துவிட்டதாகப் பெருமிதம் கொண்டாள்.

அன்று வெள்ளிக்கிழமை. சாயந்திரம் கம்பெனியிலிருந்து வந்த கந்தசாமி அக்கா உடம்பை என்னவோ வலிக்கிறுப்போலிருக்கிறது. தலை சுற்றுகிறது. ஏதாவது கஷாயம் போட்டுக் கொடேன் என்று சொல்லிக் கொண்டே வந்து படுத்தவன். மறுநாள் காலையில் வழக்கம்போல் எழுந்திருக்க முயன்றான். அவனால் எழுந்திருக்க முடியவில்லை. தட்டுத் தடுமாறிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

ஆனால் சகுந்தலா அவனை எழுந்திருக்க விடவில்லை. 'இப்படி இருக்கும்பொழுது எப்படி வேலைக்குப் போவாய், இன்று ஒரு நாளைக்கும் லீவு எழுதிப் போட்டுவிடு. முடிந்தால் நாளை போய்க்கொள்ளலாம்' என்று தடுத்தாள்.

'போகாமலே இருந்தால் மானேஜர் கோபித்துக்கொள்ளுவார். அக்கா மெள்ள மெள்ளப் போய் லீவு லெட்டரைமட்டும் கொடுத்துவிட்டு வந்துவிடுகிறேன்' என்று மெதுவாக எழுந்திருந்தான். தலை சுற்றியது. படுக்கையில் சாய்ந்துவிட்டான்.

'வேண்டுமானல் லீவு லெட்டரை நான் கொண்டு கொடுத்துவிட்டு வருகிறேன். நீ பேசாமல் படுத்திரு என்று தம்பியை படுக்க வைத்துவிட்டு தன் கைப்படவே லீவுலெட்டரை எடுத்துக்கொண்டு கம்பெனியை நோக்கி நடந்தாள்.

தம்பி சொல்லியனுப்பிய அடையாளத்தைக்கொண்டு கம்பெனியை அடைந்த சகுந்தலா முன் பக்கமிருந்த மானேஜரின் அறையை அடைந்தாள். வாசலில் நின்றபடியே மானேஜரின் ஸீட்டை நோக்கிய சகுந்தலாவின் நெஞ்சம் துணுக்குற்றது.



அவள் கற்பனை செய்துகொண்டு வந்த மானேஜருக்கும் கண்ணெதிரே அமர்ந்திருக்கும் மானேஜருக்கும் எத்தனையோ வித்தியாசம். இத்தனை பெரிய கம்பெனியை திறமையுடன் நிர்வகிப்பவர்—பழுத்த பழமாக நரைத்த தலையுடன் வயது முதிர்ந்த பெரியவராக இருப்பார் என்று நினைத்திருந்தாள்.

அவள் நினைத்து வந்ததற்கு மாருக கட்டழகமைந்த இளம் வாலிபன் இந்த ஸீட்டில் அமர்ந்திருக்கவே, திகைத்தாற்போல் வாசற்படியிலேயே நின்றுவிட்டாள்.



புது மாப்பிள்ளை மணி:—கல்யாணம் ஆனபிற்பாடு 'என் ஒய்ப்' பள்ளிக்கூடம் போகமாட்டேங்கரு. நான், எஸ்.எஸ். எல்.ஸி 'கம்ளிட்' பண்ணித்தான் ஆகணும்னு கண்டிப்பா சொல்லியிருக்கேன். படிக்க டயம் இல்லேன்னு சாக்கு சொல்ரு........

வைத்தா:—ஆமா. வாஸ்தவந்தானே. தினம் போது வெடிஞ்சா உன் லெட்டர்களுக்குப் பக்கம் பக்கமா பதில் எழுதிண்டிருப்பாளா, பாடத்தை படிப்பாளா, நீயே சொல்லு !

ஒருவேளை தவருக எங்கேயாவது வந்துவிட்டோமோ என்று யோசித்துக்கொண்டிருக்கையிலேயே, 'நீங்கள் யாம்மா. உங்களுக்கு என்ன வேண்டும்' என்று அந்த வாலிபனிடமிருந்து கேள்வி எழுந்தது.

'இந்த ஆபீஸ் மானேஜரைப் பார்க்க வேண்டும்'

'வந்த காரியத்தை என்னிடம் சொல்லலாம் நான்தான் மானேஜர்' என்று அவன் சொன்ன பிறகுதான் அவளுக்கு ஒரு வகையாக உறுதிப்பட்டது.

'இந்தக் கம்பெனியில் வேலை பார்க்கும் என் தம்பி கந்தசாமிக்கு உடம்பு அசெளக்யம். இன்று அவனால் வேலைக்கு வர முடியவில்லை. அதற்காக லீவு லெட்டர் இதோ' என்று கூறி கடிதத்தை மேஜைமீது வைத்துவிட்டு திரும்பிப் பாராமல் விடுவிடென்று வீட்டை நோக்கி நடந்தாள்.

'நாளை ஞாயிற்றுக்கிழமை லீவானதால் மறுநாள் வந்தால் போதுமென்று கந்தசாமியிடம் சொல்லுங்கள்' என்று மானேஜர் கூறியது படி இறங்கி வந்துவிட்ட சகுந்தலாவின் செவிகளில் பட்டும் படாமலும் விழுந்தன.

வீட்டிற்குவந்ததும், தம்பியிடம் தான் அடைந்த அதிர்ச்சியை மனம் விட்டுக் கூறிய பின்னர் தான் அவளுக்குப் பெரிய பாரம் நீங்கியதுபோலிருந்தது.

திங்கட்கிழமை கந்தசாமி வேலைக்குச் சென்றபோது அவனுக்காக ஒரு அதிசயம் காத்திருந்தது. அவன் இதுவரை பார்த்து வந்த வேலைக்கு அடுத்த கிளார்க் ஸ்தானம் அவனை வரவேற்றது. அந்த சந்தோஷ செய்தியை அக்காவிடம் தெரிவிப்பதற்காக வேலை முடிந்து வீட்டிற்குப் போகும் நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்தவாறே அன்றைய பொழுதைப் போக்கினன்.

அன்றிலிருந்து கந்தசாமிக்கு சுக்ரதசை திரும்பியிருந்தது என்று தான் சொல்லவேண்டும். இல்லையென்ருல் எல்லா கிளார்க்கையும்விட கந்தசாமியிடம் மட்டும் மானேஜருக்கு அலாதி அபிமானம் ஏற்படக் காரணமென்ன? அதோடுமட்டுமல்ல. அடிக்கடி அவனுடைய க்ஷேமலாபத்தையும் விசாரித்துக்கொள்வார் மானேஜர். இந்தப் புலி பதுங்குவது எந்தப் பாய்ச்சலுக்கோ என்று கந்தசாமிக்கு சிறு சந்தேகம். கம்பெனியிலுள்ளவர்களும் இதைப் பற்றி கசமுசவென்று ஜாடையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அன்ருடம் கம்பெனியில் நடப்பவைகளை உடனுக்குடன் அக்காவிடம் வந்து சொல்லத் தவறுவதில்லை.

இந்தப் புது வாழ்வில் மாதங்கள் நான்கு கழிந்தன. ஒருநாள் மாலையில் வேலையிலிருந்து திரும்பிய கந்தசாமி வழக்கம்போல் அக்காவிடம் வரவில்லை. சோர்ந்த முகத்துடன் அவன் அறைக்குள் போய் விட்டான்.

கையில் ஆகாரத்துடன் அவன் அறைக்கு வந்தவள் தம்பி அழுது கொண்டு படுத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

கந்தசாமி உடம்புக்கு என்ன ? என்று பதறினுள். ஒன்றுமில்லையக்கா. நான் சாப்பிட வரமாட்டேனு ? எதற்காக இருக்கிற இடத்திற்கெல்லாம் கொண்டு வந்து சிரமப்படுகிருய்' என்று பேச்சை மாற்றினுன்.

ஆனுல் சகுந்தலா லேசில் விடுவதாயில்லை. இன்று கம்பனியில் என்ன நடந்தது? வேலையிலிருந்து வந்ததும் வழக்கம் போல் ஏன் என்னிடம் வரவில்லை, என்று பரிவுடன் தம்பியின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

'அக்கா நான் பெரிய தவறு செய்துவிட்டேன்' 'என்று துக்கத்துடன் அவன் கூறி முடிக்கவும் என்ன, என்று பதறினுள் சகுந்தலா. அவள் மனம் என்ன தவறு செய்துவிட்டானே என்று சஞ்சலமடைந்தது.

'உன்னை அன்று கம்பெனிக்குப் போகச் சொல்லியிருக்கக்கூடாது.'

'ஏன்,போனதினுல் என்ன வந்துவிட்டது'

'எங்கள் மானேஜர் பெண்கள் விஷயத்தில் ஒரு மாதிரியானவர். கம்பெனியிலுள்ளவர்கள் இதற்காக அவரைப்பற்றி மிகவும் குறைவாகப் பேசிக்கொள்வார்கள். அதெல்லாம் தெரிந்திருந்

தும் உன்னைத்தடுக்காமல் இருந்துவிட்டேனே. இதோ இதைப்பார் என்று ஒரு கடிதத்தை அவள் கையில் கொடுத்தான்.

கடிதத்தைப் படித்தபொழுது அவமானத்தினால் அவள் உள்ளம் துடிப்பதை அவள் முகம் எடுத்துக்காட்டியது. ஆனால் அவள் சாமர்த்தியமாக அதை மறைத்துக்கொண்டு. 'தம்பி இதிலென்ன தவறு இருக்கிறது? ஏன் இப்படிப் பதறுகிறாய் என்று சாந்தமாகவே கேட்டாள்,

"அக்கா.நீ தானா இப்படிப் பேசுகிறாய். மானேஜர் எப்படிப்பட்டவர் என்று தெரிந்தும் உணர்ச்சியற்றவள்போல் பேசுகிறாயே, அவர் பணக்காரர் என்பது உண்மைதான். ஆனால் ஒழுக்கம் தவறியவர். அதை மறைக்கவே எளியவளான உன்னை மணக்க விரும்புகிறார். அவரையொத்த அந்தஸ்துள்ளவர்கள் அவருக்குப் பெண் கொடுக்க முன் வருவார்களா? எளியவர்கள் என்றால் ஒழுக்கத்தை விரும்பமாட்டார்களென்று அவர் எப்படி நினைக்கலாம். மேலும் கடிதத்தை உனக்கெழுத அவருக்கென்ன துணிவு...? என்று ஆத்திரமாக படபடவென்று பொரிந்து கொட்டினான்.

'வேறு பெரியவர்களில்லாததால் எனக்கே எழுதியிருக்கலாம். இதற்காகக் கோபப்படலாமா? உலகத்தில் உத்தமராயிருப்பவர்கள் காலப் போக்கில் கெட்டவர்களாகி விடுவதை வாழ்க்கையில் சகஜமாகப் பார்க்கிறோம்: அப்படியானால் கெட்டவர்கள் மட்டும் ஏன் நல்லவர்களாகத் திருந்தக் கூடாது...?' அவள் போக்கில் பேசிக்கொண்டேயிருந்தாள். அவனுக்கு இந்த உலகமே தலைகீழாகச் சுழல்வதுபோலிருந்தது.

அக்கா...அப்படியானால்...நீ சொல்வதைப் பார்த்தால்...

'ஆம் அவரை மணந்து கொள்ளவே போகிறேன்' என்று ஒரு வெற்றி வீரனைப்போல் பதிலளித்தாள்...

அக்கா உனக்கு சிறியவனே நான். ஆனால் ஒன்றுமட்டும் உறுதியாய்ச் சொல்லுவேன். அந்த உத்தமனை மணந்து கொள்வதைவிட ஆற்றிலோ, குளத்திலோ விழுவது பன் மடங்கு மேல் என்று கூறிவிட்டு கடுங் கோபத்துடன் வெளியே போய் விட்டான். தம்பி கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை என்பது அவளது மனசாட்சிக்கு நன்றாய்த் தெரியும். அவன் கூறியதிலும் பன் மடங்கு ஆத்திரமாக மானேஜருக்குக்கடிதமெழுதிவிடவும் தெரியும். கையில் பேனாவையும், கடிதத்தையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

இந்தக் கடிதம் போய்ச் சேர்ந்தால் அப்புறம் நடப்பதென்ன?

கந்தசாமி வேலையினின்று நீக்கப்படுவான். அப்புறம் சாப்பாடிற்கு, பழைய தையல் மிஷினைத் தேடவேண்டியதுதான். அதோடு மட்டுமா.........?

அவரிஷ்டம்போல் நடந்து கொண்டால் முன்னுக்கு வர ஏதுவிருக்கலாமல்லவா? இந்த இரண்டு முடிவில் எதை தேர்ந்தெடுப்பதென்று சற்று நேரம் ஆராய்ந்தாள். இரண்டும் ஒன்றையொன்று போட்டியிட்டு அவள் மனதில் சுழன்று வந்தது.

கடைசியில் தனது தம்பியின் நலனையே பெரிதென தேர்ந்தெடுத்தாள். முதலில் எழுதிய கடிதத்தைக்கிழித்தெறிந்துவிட்டு வேறு ஒரு கடிதமெழுதி தபாலில் சேர்த்தாள்.

அதன் பயன்.........?

இன்று அவள் 'வஸந்தவிலாஸ் சோப் கம்பெனி' நிர்வாகஸ்தர் நாகராஜனின் மனைவி. கந்தசாமி அந்தக் கம்பெனி மானேஜர் பதவியிலிருக்கிறான் என்று சொல்லத் தேவையில்லை.

இந்திய கவர்னர் ஜெனரலாயிருந்து சமீபத்தில் விலகிய லார்டு மவுண்ட்பாட்டன் முதல் க்ரூஸர் ஸ்குவாட்ரனின் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவரும், அவரது மனைவியும் ஸேவாய் ஹோட்டலில் சமீபத்தில் நடந்த விழாவுக்குச் செல்லுகையில் எடுத்த படம்.



மாதர் மகா சபை

குங்குமம்

'ஒரு பிரச்னை தீர்ந்தது' என்றாள் சரோஜா.

'ஏன்? என்ன விசேஷம்?' என்றாள் ருக்கு.

'மறுபடி பேபி இங்கே வந்தால் அவளை மாமி என்று அழைப்பதா? அம்மாமி என்று அழைப்பதா? வேறு ஏதாவது புதுமாதிரி உறவு முறை சிருஷ்டிப்பதா என்ற சந்தேகம் பிரமாதமாக உன் மனதில் வேலை செய்ததல்லவா?'

'இப்பொழுதுந்தான் வேலைசெய்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு வார்த்தையைத் தெரிந்து கொள்வதற்குள் எங்கே அவளை அழைத்துக் கொண்டு வந்துவிடுகிறாயோ என்ற திகில் என்மனதில் திக்கு திக்கு என்று அடித்துக் கொள்வது எனக்கல்லவோ தெரியும்! நானும் எனக்குத் தெரிந்தவர்களையெல்லாம் கேட்டுப் பார்த்துவிட்டேன். கலியாணமாகாமலே அம்மாமிகள் மாதிரி வயசான பெண்கள் வந்தால் அதுகளை என்னவென்று சொல்லி அழைப்பது என்று யாருக்கும் தெரியவில்லை.' என்றாள் விமலா.

'பேபியைப்பற்றி இனி அந்த விசாரம் விட்டது' என்றாள் சரோஜா.

'ஏன்? என்றாள் ருக்கு.

'அவள் இனி இங்கே வந்தால் 'மாமி' என்று தாராளமாகக் கூப்பிடலாம்.

'எப்படி ?'

'அவளுக்குக் கலியாணம் ஆகி விட்டது?

'கலியாணம் ஆகிவிட்டதா? போனவாரம் வந்திருந்த போதுகூட ஒன்றும் நிச்சயமாகவில்லை என்று சொன்னாய். திடீரென்று கூடிவிட்டதா?'

'ஆமாம். திடீரென்றுதான் கூடிவிட்டது. கண்டதே காதல், கொண்டதே மோகம்.

என்னடி வேடிக்கை பண்ணுகிறாய்?'

'வேடிக்கையா? கடற்கரை சுயம்வரம்!'

'சொல்லடி இருக்கட்டும்.'

ஒரு நாள் சாயங்காலம் பேபி தனிமையாக சமுத்திரக்கரையில் உட்கார்ந்து கொண்டிருந்தாளாம்' என்று சரோஜா சொல்லிக் கொண்டிருக்கையில் 'அங்கே தனியாக ஒரு மாமா வந்து சேர்ந்தாராம்' என்றாள் சாந்தா.

'சரோஜா கதை ஏதாவது சொல்கிறாள் என்று நினைத்துக் கொண்டு விட்டாயா. என்ன?' என்றாள் சாந்தாவை நோக்கி ருக்குவின் மாமியார்.

'சாந்தா சொல்வது சரிதான் மாமி' என்றாள் சரோஜா.

ருக்கு சொல்லுகிறாள்

★

'அதோ பார்த்தாயா?' என்றாள் சரோஜா.

'பார்த்தேன். அது பாதரக்ஷை போட்டுக்கொண்டு போவதைப்பற்றித்தானே சொல்கிறாய்? உனக்கு முன்னாலேயே கவனித்தேன்,' என்றேன் நான்.

'என்ன கண்றாவி வேண்டியிருக்கு?' என்றாள்.

'இளம்பெண்கள் கால்களில் மெட்டிகள் கலீர் கலீரென்று ஒலிக்க நடந்து வரும் அழகைப்பற்றி கவிகள் எத்தனையோ இடங்களில் வர்ணித்திருக்கிறார்கள். இக்காலத்தில் ஏற்பட்டுள்ள விதம் விதமான பாதரக்ஷைகளின் அழகைத் தெரிந்து கொள்ளாமல் அவர்கள் இம்மாதிரி சொல்லியிருப்பதாகவே வைத்துக்கொள்வோம். காலில் பட்டைக்கொலுசையும் போட்டுக்கொண்டு பாதரக்ஷையையும் அணிந்துகொண்டு வந்தால் அந்தக்கோரத்தைக் கண்டு யாரால் சகிக்க முடியும்?'

நான் கொஞ்சமும் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. உன் மையிலேயே எத்தனையோ 'பசங்கள்' கால்களில் பட்டைக் கொலுசைப் போட்டுக்கொண்டு பாதரக்ஷைகளையும் போட்டுக்கொண்டு போய்க்கொண்டுதானிருக்கிறதுகள். அதுகளை நாட்டுப்புறம் என்றாவது சொல்லுங்கள், பட்டணவாசம் என்றாவது சொல்லுங்கள். இந்தக்காலத்திலகூட அப்படியும் சில பிரகிருதிகள் இருந்துகொண்டிருக்கிறதுகள் என்பதைத் தான் சொல்ல வந்தேன்.

'ஏதாவது பத்திரிகையில் படித்த கதையைச் சொல்லப் போகிறீர்களா என்ன?' என்ருள் ருக்கு.

'கற்பனைக் கதை இல்லை உண்மைக் கதைதான், பேபி சமுத்திரக் கரையில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அங்கே அந்த வேளைக்கு ஒருவர் வந்து சேர்ந்தார். பேபி உட்கார்ந்துகொண்டிருந்த இடத்துக்குக் கொஞ்ச தூரத்தில் அவரும் வந்து உட்கார்ந்துகொண்டார். இருவரும் ஒரு 15 நிமிஷ காலம் சமுத்திரத்தை நோக்கியபடியே தவம் செய்துகொண்டிருந்தார்கள். பிறகு நிஷ்டையிலிருந்து கலைந்த பேபி, மாமாவின் பக்கம் தனது பார்வையைச் செலுத்திஞள்...'

'அதே சமயம் மாமாவாகிற விசுவாமித்திரரின் பார்வை பேபியாகிற மேனகையின் மீது விழுந்தது' என்ருள் பானு.

'வாஸ்தவமே. அவ்வளவுதான். இருவருடைய நிஷ்டையும் கலைந்தது. இவளை அவர் பார்ப்பதும், அவரை இவள் பார்ப்பதும் மாறி மாறி நடக்க ஆரம்பித்தது' என்ருள் சரோஜா.

'சத்திரத்துத் திண்ணைக் கதைதான்' என்ருள் விமலா.

'அதென்னடி கதை அது' என்ருள் ருக்கு.

'ஒரு நாள் அஸ்தமித்ததும் ஒரு ஆண்டி ஒரு சத்திரத்து திண்ணையில் ஒரு ஆண்டிஸ்திரீ (சந்யாசினி)உட்கார்ந்துகொண்டிருந்தாள். ஆண்டி அங்கே வந்ததும் ஆண்டியின் மனைவி எழுந்து திண்ணையின் கோடியில்போய் உட்கார்ந்துகொண்டாள். இருவரும் உலகத்தையே வெறுத்த சிவப்பழமாக விளங்கினுர்கள். ஆண்டி ஆண்டிச்சியின் பக்கம் திரும்பிஞல், ஆண்டிச்சி வேறு பக்கம் திருப்பிக்கொள்வதும் ஆண்டிச்சி ஆண்டியின் பக்கம் திரும்பிஞல் ஆண்டி மற்ருெரு பக்கம் திருப்பிக்கொள்வதும் நெருப்புபோல் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். இரவு வெகுநேரம் வரையில் இரண்டு பேரும் சிவநாமத்தை ஜபித்துக்கொண்டிருந்து விட்டு நித்திரையின் வசப்பட்டார்கள். திண்ணையில் ஒரு கோடியில் ஆண்டியும் மற்ருெரு கோடியில் ஆண்டிச்சியும் படுத்துக்கொண்டிருந்தார்கள். திண்ணையில் வேறு யாரும் இல்லை' என்று விமலா சொல்லிக்கொண்டிருக்கையில் 'இரண்டு பேரும் வெகு பலமாகக் குறட்டை விட்டிருப்பார்கள்' என்ருள் பானு.

'கேட்கவும் வேண்டுமா? சத்திரமே அதிர்ந்துவிட்டிருக்காதா?' என்ருள் விமலா.

'குறட்டையோடுமாத்திரமா நின்றிருக்கும்? மத்தியில் பெரு மூச்சும், சிறு மூச்சும், பாழும் கொசு என்ன பிராணனை வாட்டி விடுகிறது' என்று ஆண்டி சொல்வதும், 'கொசுவா இது? வாலும், இறகும் எவ்வளவு பெரிசு. தேள்மாதிரியல்லவோ கொட்டுகிறது!' என்று ஆண்டிச்சி அதற்கு ஜாடையாகப் பதில் சொல்வதும் இருவரும் காஷாய வஸ்திரத்தை இழுத்து இழுத்துப்போர்த்துக்கொண்டும் உடம்பைப் புரட்டிப்புரட்டிக் கொடுத்துக்கொண்டும் அமர்க்களப்பட்டிருக்காதா?' என்ருள் சரோஜா.

'போடி உன் குறும்புத்தனம் மாத்திரம் போகிறதில்லையே!' என்று சரோஜாவை நோக்கி சிரித்துக்கொண்டே ருக்கு சொல்லிவிட்டு 'நீ மேலே சொல்லடி' என்று விமலாவைப் பார்த்துச் சொன்ஞள்.

'சொல்வதென்ன. அவ்வளவுதான். தூக்கத்தில் ஒன்றும் தெரியாமல் புரண்டுவருகிற மாதிரி ஆண்டியிருந்த திக்கை நோக்கி ஆண்டிச்சியும், ஆண்டிச்சி இருந்த திக்கை நோக்கி ஆண்டியும் புரண்டுகொண்டே வந்து திண்ணையின் மத்தியில் இருவருக்கும் சந்திப்பு ஏற்பட்டது' என்ருள் விமலா.

எல்லோரும் கொல் என்று சிரித்துவிட்டார்கள்.

'முடிவு என்னவோ இது தான். ஆனுல் பேபியும் அந்த மாமாவும் இந்தமாதிரி கபட நாடகம் நடிக்கவில்லை. ஒருவரை ஒருவர் சந்தித்தார்கள். தத்தம் மனதில் இருந்ததைத் தெரியப்படுத்திக் கொண்டார்கள். இருவரும் சம்மதித்து



"............இவளை அவர் பார்ப்பதும் அவரை இவள்..........."

ரிஜிஸ்தர் விவாகம் செய்துகொண்டுவிட்டார்கள்' என்றாள் சரோஜா.

‘அந்த மாமாவுக்கு என்ன உத்தியோகமாம்?’ என்றாள் ருக்கு.

‘அவர் பி, ஏ. பாஸ் செய்திருக்கிறாராம். ஒரு இன்ஷ்யூர்ன்ஸ் கம்பெனியில் இருக்கிறாராம். 120 ரூபாய் சம்பளமாம். முதல் கலியாணமாகி இரண்டு, மூன்று வருஷத்துக்கெல்லாம் மனைவி போய்விட்டாளாம். குழந்தை குட்டிகள் ஒன்றும் கிடையாதாம். வயது 32, 33 இருக்குமாம்.’ பிரமாதமான அழகுமில்லை, குரூபியுமில்லை. நடுத்தரமாக இருக்கிறார், என்றாள் சரோஜா.

‘உம்!’ என்று ஒரு பெருமூச்சுவிட்டாள் ருக்குவின் மாமியார்.

‘ஏன் மாமி அப்படி?’ என்றாள் சரோஜா.

‘பேபிக்கு 140 ரூபா சம்பளம் அகமுடையானுக்கு 120 ரூபா சம்பளம். இது எப்படி ஒத்துக்கொள்ளப் போகிறது?’

‘ஏன், கணவனைவிட மனைவிக்கு அதிகச் சம்பளம் இருக்கக்கூடாதென்று சொல்கிறீர்களா?’

‘கூடாதென்று சொல்லவில்லை. எத்தனையோ பேர்கள் ஒற்றுமையாக நன்றாக இருக்கிறார்கள். இருந்தாலும், ஸ்திரீகளிடம் உள்ள ஒரு அல்ப குணத்தை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். நாம் ஸ்திரீகளாயிற்றே என்று நம்மிடம் உள்ள ஒரு ஊழலை நாம் சொல்லாமல் இருந்துவிட முடியுமா என்ன? சாதாரணமாகப் பணக்கார இடத்திலிருந்து ஏழைகள் வீட்டில் வாழ்க்கைப்படும் பெண்கள் தங்கள் கணவனை ஒரு மதிப்பில் வைக்கிறதே இல்லை. தன்னுடைய சொத்து என்று ஒரு தனி உரிமை பாராட்ட ஆரம்பித்துவிடுகிறதுகள். அதோ மூன்றாவது வீட்டில்அன்றாடம் நடைபெறும் சம்பவங்



“ ......நெருப்புபோல் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்...... ”

களை நாம் பார்க்கவில்லையோ, பணக்கார இடத்துப்பெண் அகமுடையான் ஏழை. பணக்காரர்களுக்குள்ள அந்தஸ்தில் இருக்க வேண்டுமென்று சண்டை. ஆனால் தன்னுடைய பணத்திலிருந்து பைஸா செல வழியக்கூடாது. கணவனுக்குச் சொற்ப சம்பளம் பாவம்! அநேகமாக அது கணவன் வீட்டில் இருப்பதே இல்லை. பொழுது விடிந்தால் அஸ்தமிக்கிறவரையில் மனஸ்தாபம் இல்லாத நாளே கிடையாது. தான், தன்னுடைய சொத்து, தன்னைச்சேர்ந்தவர்கள் ஆகிய இந்தக் குறுகிய மனப்பான்மை மாத்திரம் பெண்களிடம் இயற்கையாகவே கொஞ்சம் அதிகம்தான். அதுவே ஒரு புருஷனைப்பற்றி எடுத்துக்கொண்டால் அவனுக்குப் பணம் கையில் அதிகம் சேரச் சேர அதைத்தன் மனைவிக்கு நகையாகவோ புடவையாகவோ இன்னும் அவளுக்கு இஷ்டமானதையெல்லாம் செய்து அழகு பார்க்கிறான். அவர் அதனால் படும் சந்தோஷத்தைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுகிறான். சமயம் வந்தால் தன் மனைவிக்காக உயிரைக் கொடுக்கவும் சித்தமாக இருக்கிறான் என்று ருக்குவின் மாமியார் சொல்லும்போது, ‘அது மாத்திரம் உண்மை மாமி, புருஷன் செய்து போட்ட நகையையே அவனுக்கு அவசரம் நேரிட்ட காலத்தில் சில ஸ்திரீகள் கழட்டிக் கொடுக்க மாட்டார்கள். அவன் அதனால் ஜெயிலுக்குப் போவதானால்கூட வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் இருப்பார்கள். அது விஷயத்தில் சில ஸ்திரீகளுக்கு அந்த அசட்டுக் குணம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால் இப்பொழுது எல்லாம் படித்திருக்கிறதுகள். உலகத்தைத் தெரிந்துகொண்டிருக்கிறதுகள். அவ்வளவு கேவலமாக நடந்து கொள்ளாதுகள்’ என்றாள் பானு.

‘உனக்குப் பைத்தியமா என்ன? எதற்கெடுத்தாலும் நம்ம பெரியவர்கள், நம்ம சாஸ்திரமும், ஆசார அனுஷ்டானமும் என்றுநான் சொல்ல ஆரம்பித்துவிடுவதாகப் பரிகாசம் செய்வீர்கள். தாராளமாகப் பரிகாசம் செய்யுங்கள். உங்

கள் பரிகாசத்துக்காக என் மனதில் நல்லதென்று தோன்றியதை நான் சொல்லாமல் இருக்கமுடியாது. அன்றொரு நாள் பெண்களின் கடமையைப் பற்றி ராஜாஜி சொன்னதைப் பத்திரிகையிலிருந்து ருக்கு படித்தாள். கேட்பதற்கு எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருந்தது தெரியுமா? பெண்கள் படிக்கட்டும். வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ராஜாஜி சொன்னதுபோல் அந்தப் படிப்பைக் குடும்பத்தைத் திறமையுடன் நிர்வகிப்பதில் உபயோகப்படுத்தட்டும். இளம் விதவைகள், அனாதைகள் ஆகியவர்கள் உத்யோகம் செய்யட்டும். அவர்களுக்கு வேறு கதியில்லை. அத்துடன் அது ஒரு பொழுது போக்காகவும் இருக்கும். மீதி பேர்கள் குடும்பத்தை விட்டு விட்டு, உத்யோகத்தை நாடிச் செல்வது அவ்வளவு உசிதமாக எனக்குப் படவில்லை. நீங்களெல்லாம் ரொம்ப ரொம்ப நாகரிகம் தெரிந்தவர்கள். நான் சொல்வது உங்கள் மனதிற்கு ஏற்குமோ ஏற்காதோ? அவ்வளவென்ன? பேபி கிரமமான காலத்தில் கல்யாணம் செய்துகொண்டு இருந்திருந்தால் அதனுடைய மாதிரியே வேறுவிதமாகத்தான் இருந்திருக்கும். அதையும் நாம் பார்க்கத்தான் போகிறோம். உலகத்திலேயே அரசன் என்று ஒருவன் இருந்து அவன் கீழ் பிரஜைகள் என்று அவனுடைய சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டிருந்தால் அதனுடைய அழகே வேறுதான். எல்லோருமே அரசர்களாகி எல்லோரும் தங்கள் வசம் சட்டங்களை வைத்துக்கொண்டுவிட்டால் அதன் விபரீதமே வேறுதான். இதைச் சொன்னால் சமதர்மம் பேசுகிறவர்கள் நம்மை அடிமை மனப்பான்மை பேர்வழிகள் என்று சொல்வார்கள்,' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஏது, ஏது, இன்று மாமி பெரிய பிரசங்கத்துக்கே ஆரம்பித்துவிட்டாற்போலிருக்கிறது. மாமி பழைய சம்பிரதாயங்களைப்பேச ஆரம்பித்துவிட்டால் அவ்வளவுதான். இப்பொழுது ஓயாது எனக்கு வீட்டில் கொஞ்சம் வேலை இருக்கிறது. நாளைக்கு ஸாவகாசமாய் ஒழித்துக்கொண்டு வருகிறேன் என்று எழுந்தாள் பானு.

'எது எப்படியாவது போகட்டும். என் விசாரம் தீர்ந்தது' என்று எழுந்தாள் ருக்கு.



பண்டித நேரு, சென்னைக் கவர்னர் தம்பதியோடு சென்னையில் லட்சக்கணக்கான மக்களுக்கு இவ்வாறு காரில் நின்று தரிசனம் தந்தார்.



யாசகப் பிழைப்பு!

ஜெயராம்

ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனின் வாம பாகத்தில் விளங்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மி ஒரு ஸமயம் கைலாஸ பர்வதத்தையடைந்து ஸ்ரீ பார்வதி தேவியை யோக க்ஷேமம் விசாரித்தாள். பார்வதியை "உன் நாதன் எங்கே?" என்றுகேட்பதற்குப்பதிலாகப் பரிகாசம் செய்யும் எண்ணத்துடன் "பிக்ஷுகள் எங்கே?" என்று கேட்டாள். பார்வதி தன் பதி ஒரு ஸமயம் பிக்ஷை வாங்கிய விருத்தாந்தத்தைச் சுட்டிக் காட்டித் திருமகள் தன்னை ஏளனம் செய்கிறாள் என்று நினைத்து "யாருக்குத் தெரியும்! மகாபலியின் யாகசாலைக்குப் போயிருக்கலாம்" என்று பளிச்சென்றுவிடை கூறித் திருமாலும் யாசகத்தொழிலில் பின் வாங்கியவரல்லர் என்பதை ஞாபகமூட்டினாளாம். இதைப்போல் திருமகளுக்கும் மலைமகளுக்கும் நடந்த ஸம்வாதம் மிகவும் ரஸமாக இருக்கும் இந்த வினா விடையிலிருந்து ஹரிஹரர்கள் ஒரு காலத்தில் யாசகம்கூடச் செய்தார்கள் என்பதுதெரிகிறது. லோகத்தின் க்ஷேமத்திற்காக சங்கர நாராயணர்களால் செய்யப்பட்ட யாசகம் என்ற கலையானது ஒரு உண்மையான கலையாகவே மனிதர்களால் சொந்த ஜீவனோபயமாக அப்யஸிக்கப்பட்டு இன்று விசேஷமான அபிவிருத்தியுடன் கூடி வெகு மெருகுடன் பிரகாசிக்கிறது.

நம் சமுகத்தில் தொழில் முறையிலல்லாமல் அவ்வப்போது தேவையான சிறு பொருள்களைப் பெறும் நிமித்தம் இந்த யாசகத் தொழில் "அமெச்சூர்" முறையில் ஓரளவு கையாளப்படுவதும் உண்டு. காலை 7-மணிக்கு நம் எதிர் வீட்டு நண்பர் ஒரு புது க்ஷவர பிளேடு கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம். கேட்டதற்காக அவரைக் குறை கூற முடியுமா? ஸமயத்தில் பிளேடு இல்லாமற்போனால் உடனே கடைக்குப் போய் வாங்கி வந்து க்ஷவரம் செய்துகொண்டு வேலைக்குப் போக நேரமேது? இந்த ஒரு பிளேடு கொடுத்ததற்காக நம் நண்பரிடம் 2-அணா நாம் கேட்டு வாங்கப் போவதில்லை. அவரும் கொடுக்கப் போவதில்லை. இந்த முறையில் இதை பிளேடு யாசகம் என்றோ தானம் என்றோ கூறாமல் வேறு என்ன சொல்வது! கறிகாய்க் கடையில் நம்மைச் சந்தித்த நண்பரொருவர் கையில் கொண்டு வந்த சில்லரை போதாமல் நம்மை 4 அணா கேட்கிறார். நாம் கொடுத்தால்தான் கௌரவம். ஆனால் நாம் ஞாபகம் வைத்திருந்து அவரை இந்த 4 அணாவைக் கொடுக்கும்படி திருப்பிக் கேட்கப் போவதில்லை. அவரும் பிரமாதமாக இந்த சிறு தொகையைக் கொண்டு போய்க் கொடுப்பதா என்று ஸங்கோசப்படுவார். இது மாதிரியான ஸந்தர்ப்பங்களில் சில கெட்டிப் பேர்வழிகள் ஒரு முழு ரூபாயாகக் கொடுத்து பிறகு அதை வசூலித்துவிடுவார்கள். வசூலிக்கமுடியாமல் போய் விடுவதுமுண்டு!

ஸார்! பௌண்டன்பென் இங்க் கொஞ்சம் கொடுங்கள் என்று வெகு அவசரமாக நம்மிடம் வந்து நாம் ஒரு ரூபாய் போட்டு கடைக்குக் கடை அலைந்து வாங்கி வைத்திருக்கும் மைப்புட்டியைக் காலி செய்யும் கைங்கர்யத்தில் ஈடுபடுபவர் அநேகர். திடீரென்று எதிர்பாராதவிதமாய் விருந்தாளிகள் வந்துவிட்டால் பழக்கமுள்ள வீடுகளில்போய் மோர், வாழை இலை இவைகளை யாசித்து வாங்கி வருவதும் உண்டு. இத்யாதி கார்யங்களில் சமுகத்தில் ஒருவருக்கொருவர் கொடுத்தும் வாங்கியும் வருவது தவிர்க்க முடியாத ஒரு கூட்டுறவு ஸம்பிரதாயம்.



மேற்கூறிய அமெச்சூர் யாசகங்களைத் தவிர 'யாசகம்'என்பதையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு புதிய புதிய முறையில் விசேஷஸாமர்த்தியத்துடன் இந்த கலையை அப்யஸிப்பவர்களே ஸமூகத்தின் பரம விரோதி

களாகிறார்கள். தெருவில் அம்மா தாயே! என்று கூறிக்கொண்டோ பஸ் ஸ்டாண்டுகளிலும் கோவில் வாசல்களிலும் பிரயாணிகளையும், யாத்ரீகர்களையும் முற்றுகை போட்டோ ஜீவனம் செய்யும் கூட்டத்தில் சேருவதற்கு ஜிகுப்ஸைப்பட்டுக் கொஞ்சம் சுயமரியாதைக்காரர்களாயிருந்து இதே விருத்தியை நாகரீகமாயும் கற்பனா சக்தியுடனும் கையாண்டு வருபவர்களே யாசகர்கள் எனப்படுவோர்கள். பிச்சைக்காரர்கள் அணுக அஞ்சும் இடங்களுக்கெல்லாம் ஸாமர்த்தியமாகவும், தைர்யமாகவும் போகக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள் யாசகர்கள். பிச்சைக்காரர்கள் எதிர்பார்ப்பது செப்பு நாணயங்களே. நிக்கல் நாணயங்களுக்குக் குறையாமல் அபேக்ஷிப்பவர்கள் யாசகர்கள். [இப்பொழுதுதான் முழு ரூபாய் முதல் நிக்கல் ஆயிற்றே!]

ரயிலில் பிரயாணம் செய்யும்பொழுது ஒருவர் வாய் பேசாமல் பிரயாணிகள் கையில் ஆளுக்கொரு அச்சடித்த அட்டைத் துண்டைக் கொடுத்துவிட்டுப் போவார். அந்தக் கார்டில் "இதைக் கொண்டு வருபவர் பெரிய தனவந்தர் குடும்பத்தில் பிறந்தவர். வாய் ஊமை. கால வித்தியாஸத்தால் சொத்துக்கள் யாவும் இழந்து ஜீவனத்திற்கு சிரமப்படுகிறார். கொடைவள்ளல்கள் இவருக்கு தாராளமாக உதவி செய்யக் கோரப்படுகிறார்கள்" என்று எழுதியிருக்கும். இதனடியில் தன் பெயரை அச்சடிக்க அனுமதித்த கனவான் யார் என்று ஆராய்ச்சி செய்வதற்கு நமக்கு அக்கரையோ, அவகாசமோ இருப்பதில்லை. கார்டைக் கொடுத்தவர் சிறிது நேரத்தில் திரும்பி வருவார். கார்டைத் திருப்பிக் கொடுக்கும்படி அபினயம் பிடிப்பார். இஷ்டமுள்ளவர்கள் ஏதாவது பணம் கொடுப்பார்கள். இது ஒரு யாசக முறை. இந்த ஆள் டிக்கட் வாங்கியிருக்கிறாரா? டிக்கட் பரிசோதகர் இவரிடம் டிக்கட் கேட்கிறாரா? என்பதெல்லாம் வெகு "கூடமான" விஷயங்கள்.

ரயில்வே ஜங்ஷன் பிளேட்பாரங்களில் திரிந்துகொண்டு வருகிற பிரயாணிகளிடம் அப்பொழுதுதான் தன் மணிபர்ஸ் திருட்டுப் போய்விட்டதாயும், 35 மைல் தூரத்தில் உள்ள தன் ஊருக்குப்போகச் செலவிற்கு ஒரு ரூபாய் கொடுத்தால் போதுமென்றும் இதே முறையில் பிரதிதினமும் ஒரே ஸ்டேஷனில் பிரயாணிகளைப் பொருள் உதவி கேட்பது மற்ெறாரு யாசக முறை.

விஷப்புகைப் பிரயோகத்தைச் சமாளிக்க "கியாஸ் மாஸ்க்" உபயோகிப்பது போலவும் ஆகாயத் தாக்குதலைத் தவிர்க்க "விமான எதிர்ப்பு பீரங்கி"கள் அமைப்பது போலவும் இந்த யாசகர்களுக்குத் தகுந்த தற்காப்பு முறைகள் சிருஷ்டிக்கப்பட்டுத் தேர்ச்சி செய்யப்படுகின்றன. மிகப் பெரிய மனிதர்களால் கையாளப்படும் "யாசகத்தற்காப்பு" முறைகள் மிக வெற்றிகரமானவை. முதலில் பெரிய மனிதர்கள் வசிப்பதே ஊருக்கு வெளியில் உள்ள பங்களாக்களில்தான். யாசகர்கள் இவர்கள் வீட்டைத் தேடிப்போவது சிரமமே. தவறி வந்துவிட்டாலோ காம்பவுண்டு கேட்டைத்தாண்டி உள்ளே பிரவேசிக்கமுடியாது. கேட்டுகளின் உட்புறம் விதவிதமான தாழ்ப்பாள்களையமைத்திருப்பார்கள். உள்ளே போகக் கூடும், அல்லது பால்காரனோ, தபால்காரனோ போகும்பொழுது கூடவே போய்விடலாம். ஆனால் கேட்டைத் தாண்டும்பொழுதே நாய் ஒன்று வீட்டு வாயிற்படியிலிருந்து காதுகளை விறைத்துக் கொண்டு பார்த்துக்கொண்டே இருக்கும். புது ஆள்வந்தால் ஒரே பாய்ச்சல்தான்!

இந்த யாசகர்களுடைய தாக்குதல்களுக்கு அடிக்கடி இலக்காகுபவர்கள் நடுத்தர அந்தஸ்துள்ள ஸாமான்யப் பேர்வழிகளே. இவர்களுக்கு வாய் ஒன்றைத் தவிரத் தற்காப்பிற்காக வேறு ஒரு ஸாதனமும் இல்லை.

மேலத்தெரு மீனாட்சிசுந்தரமய்யர் ஒரு சுமாரான தனிகர். இவர் யாசகர்களைக் கையாளும் முறையே அலாதி. யாசகர்கள் கண்களில்படும்படி எப்பொழுதும் வாசல் திண்ணையில் ஊஞ்சலில்தான் உட்கார்ந்து கொண்டிருப்பார். திண்ணையின் கீழே உள்ள "கேட்டுக்கதவு" எப்பொழுதும் திறந்துதான் இருக்கும். யாசகர்கள் வந்தால் வெகு ஸரளமாகப் பேசுவார். ஆனால் யாசகர்கள் திரும்பிப்போகும்பொழுது காலணாக்கூடவாங்கிப்போக முடியாது. ஒருநாள் மாலை 4–மணிக்கு ஒரு யாசகப் பேர்வழி வந்துசேர்ந்தார். அய்யரவர்கள் தன் அருகில் இருந்த நாற்காலியில் அவரை அமரச்செய்து யோகக்ஷேமம் விசாரித்தார். வந்தவர் தன் 10 வயதுப் பையனுக்கு உபநயனம் செய்யவேண்டுமென்றும், முக்கியமான அந்த கர்மாவை நடத்துவதற்கு தனிகர்களான ஆஸ்திகர்களின் உதவியை நாடுவதாயும் தெரிவித்தார். அய்யரவர்கள் "டேய் பஞ்சாங்கத்தை எடுத்து வாடா!" என்று பையனை ஏவினார். பஞ்சாங்கம் வந்ததும் புரட்டிப் பார்த்தார். "ஸ்வாமி! வைகாசி மீ 12வ நல்ல உபநயன முகூர்த்தம். 11வ யே தாங்கள் குழந்தையையும் தங்கள் கிருஹணியையும் அழைத்துக்கொண்டு நம் கிருஹத்திற்கு வந்துவிடுங்கள். என் சொந்த செலவில் சொற்பமாக உபநயனத்தை நடத்தி விடுவோம்' என்றார். யாசகர் கொஞ்சம் தடுமாறினார் "இல்லை, ஏதோ உங்கள் அனுக்ரஹமாகக் கொஞ்சம் திரவியம் கொடுத்துவிட்டால் நான் உபநயனத்தை நடத்திக் கொள்கிறேன். தங்களை அவ்வளவு சிரமப்படுத்தக் கூடாது" என்றார். அய்யர்

வாள் தாமே தன் கிருஹத்தில் உபநயனம் நடத்திக் கொடுப்பதாகத்தான் உத்தேசம் என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார். யாசகர் மறுபடி வந்து தகவல் தெரிவிப்பதாகக் கூறிப்போன பேர்வழி இதுவரை வரவேயில்லை. அவருக்கு உபநயனம் செய்யவேண்டிய வயதில குமாரன் இருந்தானா என்பது பகவானுக்குத்தான் தெரியும்!



"அமெச்சூர்" யாசகப் பேர்வழிகளும் மீனாட்சி சுந்தரமய்யரவர்களிடம் வெற்றிபெற முடியாது.

காலணாவிற்கு மை மாத்திரை வாங்கிக் கரைத்து மாதக் கணக்காக ஒரு புதிய மைப்புட்டியில் ஊற்றி ஜன்னலில் வைத்திருப்பார். பௌண்டன் பேனா இங்க் யாசகப் பேர்வழிகள் வந்தால் தாராளமாக அந்தப் புட்டியைக் காட்டி எடுத்துப் போட்டுக்கொள்ளச் சொல்வார். அந்த ஆசாமி இங்க் யாசகத்தை மறுநாள் முதல் நிறுத்தி விடுவார். பேனாவை ஒரு நாள் முழுதும் ஊறப்போட்டுச் சுத்தம் செய்த கஷ்டம் அவருக்கல்லவா தெரியும்!

பீஹார் பூகம்பத்தில் தன் சொத்துக்களை இழந்ததாகக் கூறிக்கொண்டு வருபவர்கள், வகுப்புவாத வெறியினால் தாக்குண்டதாகச் சொல்பவர்கள், ஹரித்வாரத்தில் ஒரு மடம் கட்டப்போவதாகப் பிரகடனம் செய்துகொண்டு யாசிப்பவர்கள் இவ்வாறான பலவித யாசகர்களையும் "ஸால்ஜாப்" சொல்லி ஸமாளிக்கும் திறமை மீனாட்சி சுந்தரமய்யரிடம் பரிபூர்ணம். அவரைக் குறை கூறுவதா? அல்லது யாசகர்களைக் குறைகூறுவதா?

கேச விருத்திக்கு சிக்கன சுலப சாதனம்
காஷ்மீர்-குஸும்
வேண்டிய எண்ணெயில் கலந்து கொள்க
குடும்ப சரும-சஞ்சீவி
ஸான்டலக்ஸ்
நறுமண சந்தனக்கட்டிம்பு
மைசூர் M.R. ஜெட்டப்பாவின்
பிரேமலீலா
உயர்தர ஊதுவத்திகள்
ஸோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதராஸ். 1
டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.



ஸங்கீத வித்வான் ஸ்ரீ டி. பி. கைலாஸத்திற்கும், ஸௌ. காமாட்சிக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

ஸ்தாபிதம் 1924
பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

"மித்திரன்" காரியாலயத்தைச் சேர்ந்தவரும், தண்டாங்கூரை ஸ்ரீ நடேசய்யர் குமாரனுமாகிய சி. டி. என். வைத்தியநாதனுக்கும், ஆங்கரை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தீக்ஷதர் குமாரி ஸௌ. ராஜலக்ஷ்மிக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

(மேல்)

சென்னை நகரம் என்றுமே கண்டிராத ஜனக் கூட்டத்தில் நேரு $1\frac{1}{2}$ மணி நேரம் ஒப்பற்றவிதமாகப் பேசினார். இக்கூட்டம் ஒரு பகுதிதான்! இதைப்போல பல மடங்கு அதிகமாக ஐலண்டு கிரவுண்ட் மைதானத்தில் ஜனங்கள் கூடியிருந்தனர்.

★

(கீழ்)

கூட்டத்தைக் கண்டு நேரு பிரமித்து சில நிமிஷங்கள் பார்த்துக்கொண்டிருந்தார்.

★

தொழிலாளர் கூட்டத்தில் நேரு பேச ஆரம்பித்தவுடன் ஒருபக்கத்து ஒலிபெருக்கி கருவி "மக்கர்" செய்துவிட்டது. இதைத் தொடர்ந்து எழுந்த கூச்சலை யாருமே அடக்க முடியவில்லை. பண்டித நேருவே கீழே குதித்து ஸ்ரீ காமராஜ நாடார் பின்தொடர கூட்டத்தை கோபத்துடன் அடக்க சென்றார். கோபமும், தீரமும் ஒருங்கே கூடிய முகபாவத்துடன் நேரு செல்வதைக் காட்டும் பிரத்யேகமான படம்.



கார்ப்பொரேஷன் ஸ்டேடியத்தில் நடந்த தொழிலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படம். படத்தில் பண்டித நேரு கொடியை ஏற்றுவித்து உயரப்பார்க்கிறார்.



'மித்திரன்' காரியாலயத்தைச் சேர்ந்தவரும், காலஞ்சென்ற ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தியின் சகோதரருமான ஸ்ரீ. எஸ். ராமச்சந்திரய்யரின் புதல்வர் சிர. ஆர். ராஜகோபாலன் பி. காம். க்கும் அண்ணாமலை சர்வ கலாசாலை "ரீடர்" ஸ்ரீ. ஆர். கே. விச்வநாதனின் புதல்வி ஸௌ. மீனாட்சிக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.



காட்டூர் கிருஷ்ணமாச்சாரியாரின் குமாரனும் கல்கியின் எழுத்தாளருமான சிர. கி. ரா. கோபாலனுக்கும் எஸ். ஐ. ரயில்வே இன்ஜினீர் ஆபீஸ் தலைமை குமாஸ்தா ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராகவாச்சாரி குமாரத்தி ஸௌ. லக்ஷ்மிக்கும் சமீபத்தில் சிறப்பாக விவாஹம் நடந்தது.

உங்கள் எதிர்காலம்

பணமில்லாமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக்கு ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை
இரண்டாம் பாகம் ,, ரூ. 2.
மூன்றாம் பாகம் ,, ரூ. 2.
தபால் செலவு அணா 10.
முன்பணம் அனுப்பவேண்டும்.
V. P. P. அனுப்புவது கிடையாது.
மானேஜர் :
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

தி ஜெயபாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ் : பம்பாய்)

★

மதராஸ் டிவிஷன் ஆபீஸ்:

"கெய்த்னெஸ் ஹால்" 310-311, லிங்கி செட்டி தெரு, மதராஸ்.

★

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	.....	ரூ. 1,00,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	.....	ரூ. 50,00,000
ஐவேஜிகள்	.....	ரூ. 50,00,000-க்குமேல்

ஆயுள், தீ, கப்பல் & மோட்டார் கார் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு முதன்மை ஸ்தானம் வகிக்கும் தேசீய ஸ்தாபனம்.

தமிழ்நாடு பூராவுக்கும் நல்ல கமிஷன் விகிதங்கள்பேரில் செல்வாக்குள்ள ஏஜண்டுகள் தேவை.

உடனே விண்ணப்பம் செய்க:

K. K. ஐயங்கார், டிவிஷன் மானேஜர்,
தபால் பெட்டி நெ. 240, மதராஸ் 1.

அல்லது

ஸ்ரீ T. E ராகவாச்சாரி பி. ஏ. பி எல்., ஏஜன்ஸிகள் ஸுப்பரின்டெண்டு, செங்கற்பட்டு, சித்தூர் & வடாற்காடு ஜில்லாக்களுக்கு, 1/28, எட்வர்ட் எலியட்ஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

ஸ்ரீ A. R. வெங்கடரமணன், ஏஜன்ஸி ஆர்கனைஸர், 17, சின்னகடை தெரு, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினுப்பள்ளி.

ஸ்ரீ N. ரங்கநாதன், இன்ஸ்பெக்டர், 8/70, கீழ வீதி, **தர்மபுரி.** (சேலம் ஜில்லா)

ஸ்ரீ E. R. கிருஷ்ணன், ஏஜன்ஸி ஆர்கனைஸர் எலபுள்ளி போஸ்டு, **பாலக்காடு**

நல்ல நிபந்தனைகள்பேரில் மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு ஏஜன்ஸி ஆர்கனைஸர்கள் தேவை.

விண்ணப்பிக்கவும்:—

டிவிஷன் மானேஜர், தபால் பெட்டி நெ. 240, மதராஸ் 1.

பராசக்தி பிலிம்சாரின் வேண்டுகோள்

11—7—48ல மந்திரி குமாரி என்ற படத்தில் நடிக்க நடிக, நடிகையர்கள் தேவை என்று கோரப்பட்டதில், தற்சமயம் நடிக, நடிகையர் செலக்ஷன் ஒத்திவைக்கப்பட்டது. செலக்ஷன் பின்னல் தெரிவிக்கப்படும்.

மானேஜர்,
பராசக்தி பிலிம்ஸ், கண்டமநாயக்கனூர்.

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.

40-நாள் மருந்து ரூ. 3-12-0.
பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

சக்தி ஆரூடம்!

ரேடியோ புகழ் ஸ்ரீமதி திருக்கோவிலூர் S. அலமேலு எழுதுகிறார்:—

"தாங்கள் எனக்கு மே மீ 27-ந் தேதியிலிருந்து ஜூன் மீ 3-ந் தேதிக்குள் ரூ. 1000 கிடைக்குமென்று கூறியபடியே ரூ. 1000 கிடைத்தது."

1 முதல் 3 கேள்விகள் ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

S.A.H
TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936)

விநோத கதா மஞ்சரி விலை ரூ. 1—0—0
(தபால் செலவு பிரத்யேகம்)
சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசிகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.



45 வருஷமாகப் புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் தீருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புருக்கி, பவுத்திரம், நீரில் உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினால் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி
R.M. நாராயணசாமி பிள்ளை
தன்வந்திரி வைத்தியசாலை,
பழனி. (S. I.)

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது

அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ். போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கிழவீதி

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

பரிசு! பரிசு!!



போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுதீர்கள்.

பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உரை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்.

S. M. கிருஷ்ணா அண்டு கோ.,

2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு. மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோ. வில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை சென்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸலின், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,

40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

லோடஸ் ஹனி

சுத்தமான லோடஸ் ஹனி எல்லாவிதமான கண் வியாதிக்கும் குணம் தருவதாகும். மங்கலான பார்வை, கண்ணில் நீர் வடிதல் மற்றும் பல வியாதிகளையும் நீக்குவதுடன், முறைப்படி உபயோகித்தால் பார்வையும் தீக்ஷண்யமாகும்.

புட்டி விலை ரூ. 1-4-0.

தேசபந்து ஹர்பல் ஹோம்,

Deshbandhu Herbal Home,

7, Ganga Prasad Mukerji Road,

Bhowanipore, Calcutta 25.

ஸ்ரீ சாயிநாதாய நம:

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும்
பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,, 1.
விவாக பொருத்தம்பார்க்க	,, 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?
இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம்,
வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம்
சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்:
வால்டேர், ஆர். எஸ்.

லக்ஷிமி & கோ.,
2/135, பிராட்வே, மதராஸ்.



தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

தரகரை நம்பினால் . . .

நீங்கள் மோசம் அடைவீர்கள்

வைரம் வாங்குவதில் மிதமிஞ்சி ஜாக்கிரதை யுள்ளவர் வியாபாரியின் நாணயத்தை நம்பாமல் மூன்றாம் மனிதரை நம்பினால் ஏமாற்றமடைவர்.

தரகர் தன்னுடைய நலனுக்கே பாடுபடுவார். சுய நலனுக்காக தனக்கு **சகாவான** வியாபாரியிடமே விகிதம் நிர்ணயித்துக்கொள்வார்.

அதிகமான வரும்படி கிடைக்கும் **இடத்திற்கே** அவர் வியாபாரத்துக்கு சிபார்சு செய்வார். அதனால் உங்களுக்கு சிறந்த ரகம் கிடைக்காது. உங்கள் நலன் பாதிக்கப்படும்.

★ புகழ் பெற்ற வியாபாரிகளிடம் நேருக்கு நேர் வியாபாரம் செய்வதே உங்களுக்கு நலனைத் தரும்.

ஸூரஜ்மல்ஸ்

50 வருஷப் புகழ்பெற்ற
வைர வியாபாரிகள்.

313, நேதாஜி ரோட், :: சென்னை.